விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 070 வள்ளுவர் ஆண்டு 2056 மாசி 15 வியாழக்கிழமை (27.02.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## பாதாளக் கும்பல்களுடன் தொடர்புடைய அரசியல்வாதிகளின் பெயர்கள் பகிரங்கப்படுத்தப்படும்

### அமைச்சர் நளிந்த அறிவிப்பு




(கொழும்பு)

பாதாள உலகக் குழுக்களுடன் தொடர்புடைய அரசியல் வாதிகளின் பெயர் விபரங்கள் விரைவில் பொதுமக்கள் அறிந்து கொள்ளும் வகையில் பகிரங்கப் படுத்தப்படும் என அமைச்சரவைப் பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ 02ஆம் பக்கம் பார்க்க

## இரட்டை நிலைப்பாட்டில் மனித உரிமைகள் ஆணையகம்

### சாடுகிறார் ரணில்



(கொழும்பு)

ஐ.நா மனித உரிமைகள் ஆணையகம் உக்ரை னையும இலங்கையையும் வித்தியாசமாக நடத்து வதன் மூலம் இரட்டை நிலைப்பாட்டை பின்பற்றுகிறது. எனவே தற்போதைய அரசாங்கமும் ஏனைய அரசியல் 02ஆம் பக்கம் பார்க்க

## உள்ளகப் பொறிமுறைமூலம் தீர்வு

# மக்களின் நம்பிக்கையைப் பெற நல்லிணக்க ஆணைக்குழு உருவாகும்

### தேசிய ஒற்றுமையே எமது இலக்கு
### ஐ.நா பேரவையில் அமைச்சர் விஜித ஹேரத் உறுதி



(ஜெனிவா)

சகல தரப்பினரதும் நம்பிக்கையை வென்றெடுக்கக்கூடிய வகையில் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பான கலந்துரையாடல்கள் சம்பந்தப்பட்ட சகல தரப்பினரையும் உள்ளடக்கி முன்னெடுக்கப்படும் என வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரி வித்துள்ளார். (15ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கின் பெரும் துடுப்பாட்ட சமர்கள் ஒத்திவைப்பு



11ஆம் பக்கம் பார்க்க

## வெளிநாடுகளுக்கான உதவியை நிறுத்தியது அமெரிக்கா



### இலங்கையின் முக்கிய திட்டங்கள் பாதிப்பு

14ஆம் பக்கம் பார்க்க

## நாமல் எம்.பியிடம் சி.ஐ.டி விசாரணை

(கொழும்பு)

2013ஆம் ஆண்டில் ஸ்ரீ லங்கன் எயார் லைன்ஸ் நிறுவனத்திற்கு எயார்பஸ் A-330 விமானங்கள் 6 மற்றும் A-350 விமானங்கள் 8 ஆகியவற்றை கொள்வனவு செய்தமைக்கான எயார்பஸ் விமான ஒப்பந்தம் தொடர்பில் வாக்குமூலம் வழங்குவதற் காக நாமல் ராஜபக்ஷ நேற்றுப் புதன்கிழமை (26) காலை 09.00 மணியள 15ஆம் பக்கம் பார்க்க

## கட்டடத்தில் இருந்து தவறிவிழுந்தவர் உயிரிழப்பு

### கொக்குவிலில் சம்பவம்

(கொக்குவில்)

யாழ்ப்பாணம் கொக்குவில் பூநாறிமடம் பகுதி யில் உள்ள கட்டடத் தொகுதியொன்றின் மேற் தளத்தில் மின் இணைப்பு வேலையில் ஈடுபட்டி ருந்தபோது தவறிவிழுந்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் 15ஆம் பக்கம் பார்க்க


## இராமேஸ்வரம் – தலைமன்னார் கப்பல் சேவை ஜூலை ஆரம்பம்

(கொழும்பு)

இராமேஸ்வரம் - தலைமன்னார் இடையே கப்பல் சேவையினை எதிர்வரும் ஜூலை மாதம் முதல் ஆரம்பிப்பதற்கான முதல்கட்டப் பணிகள் துரிதகதியில் இடம்பெறுவதாகத் தமிழகச் செய்தி கள் தெரிவிக்கின்றன.

இது குறித்துகருத்து 15ஆம் பக்கம் பார்க்க


## இலங்கையின் கடற்பாதுகாப்புத் தொடர்பில் கடற்படை உயரதிகாரிகளுடன் ஜனாதிபதி கலந்துரையாடல்



02ஆம் பக்கம் பார்க்க

## காற்றில் பறந்துவிட்டனவா? தே.ம.சக்தியின் வாக்குறுதிகள்

### எம்.ஏ.சுமந்திரன் கேள்வி



(யாழ்ப்பாணம்)

முன்னைய அரசாங்கம் பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்குப் பதிலாக மாற்றுச் சட்டம் ஒன்றைக் கொண்டு வருவதாகத் தெரி வித்தபோது அதனை கடுமையாக எதிர்த்த ஜே.வி.பியினர் இன்று தாமும் அதே போக்கைக் 15ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடற்படை...

நாட்டின் தற்போதைய கடற் பாதுகாப்பு நிலைமை தொடர்பில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தலைமையில் நேற்று புதன்கிழமை ஜனாதிபதி அலுவலகத்தில் கலந்தாலோசிக்கப்பட்டது.

தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்த கடற்பரப்பில் மேற்கொள்ளப்படும் முன்னெடுப்புகள், கடல் மார்க்கமாக நடைபெறும் ஆயுத விற்பனையைத் தடுத்தல் மற்றும் கடல் மார்க்கப் போதைப்பொருள் விற்பனை சுற்றிவளைப்பு உள்ளிட்ட ஆழ்கடலில் மேற்கொள்ளப்படும் கண்காணிப்பு முன்னெடுப்புகள் குறித்தும் இங்கு விரிவாக ஆராயப்பட்டது.

இந்தச் சந்திப்பில் இலங்கையின் கடற்பாதுகாப்பு நிலைமை தொடர்பிலான எதிர்கால நடவடிக்கைகள் குறித்து கவனம் செலுத்தப்பட்டது.

பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜயசேகர, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் எயார் வைஸ் மார்ஷல் சம்பத் துய்ய கொந்தா, கடற்படை தளபதி வயிஸ் அட்மிரல் கஞ்சன பானகொட உள்ளிட்டவர்களும் கடற்படையின் உயர் அதிகாரிகள் பலரும் இதில் கலந்துகொண்டிருந்தனர். (ந-7)

## இரட்டை...

கட்சிகளும் இந்த விடயத்தை தீவிரமாக எடுத்துக் கொள்ள வேண்டும் என்று முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டு செப்ரெம்பரில் ஐ.நா மனித உரிமைகள் ஆணையம் இலங்கை தொடர்பில் ஒரு தீர்மானத்தை எடுக்கும் என எதிர்பார்க்கப்படுவதால், இலங்கை அரசாங்கமும் பிற பங்குதாரர்களும் இந்த விடயத்தை இப்போதே மிக கவனமாக எடுத்துக் கொள்ள வேண்டும் என்று தெரிவித்த பல ஐரோப்பிய நாடுகள் உக்ரைன் ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கி ஜனாதிபதித் தேர்தலை நடத்தாதது குறித்து அவர்கள் மௌனம் காத்து வருகின்றனர்.

இலங்கையில் வடக்கில் விடுதலைப் புலிகள் மற்றும் தெற்கில் ஜேவிபி சண்டையிட்ட நேரத்தில் நாங்கள் தேர்தல்களை நடத்தினோம். இலங்கை சரியான நேரத்தில் தேர்தல்களை நடத்தியது. 2024 இல் நாங்கள் தேர்தல்களை நடத்தினோம்.

தற்போது ஜே.வி.பி தலைமையிலான அரசாங்கம் ஆட்சியில் உள்ளது. ஜே.வி.பி தேர்தலில் வெற்றி பெற்றது மட்டுமல்லாமல், அவர்களை ஒரு ஜனநாயக அமைப்புக்குள் கொண்டு வர முடிந்தது.

இருப்பினும் ஐ.நா மனித உரிமைகள் அலுவலகம் இரட்டைத் தரங்களைப் பின்பற்றுகிறது, அவர்கள் இலங்கையை வித்தியாசமாக நடத்துகிறார்கள். குறிப்பாக ஐ.நா மனித உரிமைகள் அலுவலகம் இந்த ஆண்டு செப்ரெம்பரில் இலங்கை குறித்து ஒரு தீர்மானத்தை எடுக்க இருப்பதால் தற்போதைய அரசாங்கமும் நாம் அனைவரும் இந்தச் சூழ்நிலையைக் கவனமாக கையாளவேண்டும் என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (ந-7)



வரலாற்றுச் சிறப்புமிக்க வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் மகா சிவராத்திரி உற்சவம் சிறப்புற இடம்பெற்றது.

# சிவராத்திரியில் உலக சாதனை



(சாவகச்சேரி)

சிவராத்திரி தினத்தை முன்னிட்டு நேற்று பிற்பகல் தென்மராட்சியைச் சேர்ந்த உலக சாதனையாளர் செ.திருச்செல்வம் புதிதாக இரண்டு சாதனைகளை நிகழ்த்தியுள்ளார்.

1500கிலோகிராம் எடை கொண்ட வாகனத்தை தனது உடலில் கட்டி கைதடிப் பிள்ளையார் ஆலயத்தில் இருந்து சாவகச்சேரி பேருந்து தரிப்பிடம் வரையான 7கிலோ மீற்றர் தூரம் இழுத்ததுடன், 3000கிலோகிராம் எடை கொண்ட வாகனத்தை தனது காதுகளில் கட்டி 50மீற்றர் தூரம் இழுத்தும் புதிய சாதனைகளை நிகழ்த்தியுள்ளார்.

60வயதான உலக சாதனையாளர் திருச்செல்வம் இதற்கு முன்னரும் உலக சாதனைகளை நிகழ்த்தி சோழன் உலக சாதனைப் புத்தகத்தில் இடம்பிடித் துள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேற்படி சாதனை நிகழ்வில் விருந்தினர்களாக சிரேஷ்ட விரிவுரையாளர் சைவப் புலவர் சி.கா.கமலநாதன், மீசாலை விக்கினேஸ்வர மகா வித்தியாலய பிரதி அதிபர் கலைஞானி குமரநாதன் மற்றும் தென்மராட்சி கலாசார பேரவையின் செயலாளர் சசிகரன் ஆகியோர் கலந்து சிறப் பித்திருந்தனர். (ந-7,30)

# காணாமல்போன
## சிறுவன் சடலமாக மீட்பு

முல்லைத்தீவு - வற்றாப் பளைப் பகுதியில் 16 வயது டைய சிறுவன் சடலமாக மீட் கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து உறவினர் வீட்டுக்குச் சென்ற குறித்த சிறுவன் நேற்று முன் தினம் காணாமல் போயிருந்த நிலையில் உறவினர்களால் தேடப்பட்டு வந்ததாகத் தெரிய வருகிறது.

இந்நிலையில் நீர் நிலை ஒன்றில் இருந்து நேற்றுக் காலை சிறுவன் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டுள்ளனர். (ந-7)

## தொடர்புடைய...

தெரிவித்தார்.

பாதாள உலகக் கோஷ்டியுடன் தொடர்புபட்டவர்களைக் கண்டறிவதற்கான விசாரணைகளைப் பொலிஸார் ஏலவே ஆரம்பித்துவிட்டதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

தற்போதைய அரசாங்கம் பாதாள உலகத்திற்கு எந்த வகையிலும் ஆதரவளிக்கவோ அல்லது எந்த உதவியையும் வழங்கவோ இல்லை என அவர் உறுதிபடத் தெரிவித்தார்.

அரசாங்கம் நாட்டு மக்களின் பாதுகாப்பை உறுதி செய்வதில் எப்போதும் உறுதிபூண்டுள்ளது.

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் குழுக்களுக்கு இடையேயான தொடர்ச்சியான மோதல் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் அல்ல.

இது குற்றவியல் கும்பல்களுக்கு இடையிலான தொடர்ச்சியான மோதல், இது குறித்து நாங்கள் தெளிவாக இருக்கிறோம்.

இருப்பினும், இந்தச் சம்பவங்களைத் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகச் சித்தரிக்க ஒருங்கிணைந்த முயற்சி உள்ளது. சுற்றுலாப் பயணிகள் மற்றும் முதலீட்டாளர்களுக்கு பாதுகாப்பு இல்லை என்று கூறி சில குழுக்கள் நாட்டின் பாதுகாப்பைக் குறைமதிப்பிற்கு உட்படுத்த முயற்சிக்கின்றன.

தேசிய பாதுகாப்புக்கு எந்த அச்சுறுத்தலும் இல்லை என்பதை நாங்கள் தெளிவுபடுத்துகிறோம். தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.இந்தச் சம்பவங்களைத் தேசிய பாதுகாப்புக்கான நெருக்கடியாக மிகைப்படுத்தக் கூடாது. கொலைகள் மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் குழுக்களின் நடவடிக்கைகள் குறித்த விசாரணைகள் விரைவாக நடைபெற்று வருவதாகவும் தெரிவித்தார். (ந-7)

உங்கள் இல்லங்களில் இருந்தவாறே வலம்புரியில் விளம்பரம் செய்யும் வாய்ப்பு

அன்பு வாசகர்களே!

உங்கள் வீட்டில் இடம்பெறும் நிகழ்வுகள் மற்றும் வர்த்தக விளம்பரங்களை எவரது உதவியுமின்றி உங்கள் வலம்புரியில் நேரடியாகப் பிரசுரிக்க முடியும்.

தொடர்புகளுக்கு :

தொலைபேசி:

076 097 3127

021 221 7603

/ -076 636 3378

E.mail: Valampurii@yahoo.com

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

### அத்துமீறும் இந்திய மீனவர்கள் தொடர்பில்

# காத்திரமான நடவடிக்கைகளை தமிழக அரசு மேற்கொள்ள வேண்டும்

## கடற்றொழில் அமைச்சர் கோரிக்கை

**(கொழும்பு) இந்திய மீனவர்கள், இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து கடற்றொழிலில் ஈடுபடுவதை தடுப்பதற்கு இந்திய ஒன்றிய மற்றும் தமிழக அரசாங்கம் என்பன உரிய காத்திரமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கடற்றொழில், நீரியல், கடல்வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் கோரிக்கை விடுத்தார்.**



இந்திய பிரதி உயர்ஸ்தானிகர் சத்தியஞ்சல் பாண்டே, கொழும்பு, மாளிகாவத்தையிலுள்ள கடற்றொழில் அமைச்சுக்கு நேற்று முன்தினம் வருகை தந்தார்.

அமைச்சருக்கும் பிரதி உயர்ஸ்தானிகருக்கும் இடையிலான சந்திப்பின்போது இரு நாடுகளுக்கும் இடையிலான அரசியல், கலாசார மற்றும் பொருளாதார உறவுகள் பற்றி பேசப்பட்டாலும் மீனவர் பிரச்சினை குறித்து விரிவாக கலந்துரையாடப்பட்டது.

இதன்போது இந்திய மீனவர்களின் இழுவைப் படகு உட்பட சட்டவிரோத கடற்றொழில் நடவடிக்கையால் வடக்கு மீனவர்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகள் மற்றும் இலங்கையின் கடல்வளத்திற்கு ஏற்பட்டுள்ள சேதங்கள் பற்றியும் அமைச்சர் எடுத்துரைத்தார்.

இலங்கை கடற்பரப்பிற்குள் அண்மையில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டு சம்பவம் பற்றியும் அவதானம் செலுத்தப்பட்டது. மீனவர் பிரச்சினையை மனிதாபிமான ரீதியிலேயே அணுக வேண்டும் என இந்திய பிரதி உயர்ஸ்தானிகர் கூறும்போது, ஆம், நாம் மனிதாபிமான முறையிலேயே தான் அணுகுகின்றோம், சம்பவ தினத்தன்று இந்திய மீனவர்கள் கடற்படையினரை அச்சுறுத்தும் விதத்தில் நடந்துகொண்டதாலேயே அசம்பாவிதம் இடம்பெற்றுள்ளது என கடற்றொழில் அமைச்சர் சுட்டிக்காட்டினார். அதேபோல பெரும்பாலான மீனவர்கள் கடற்படையினர் எச்சரிக்கை விடுத்தால் திரும்பி செல்கின்றனர் எனவும், ஒரு சிலரே அத்துமீறுகின்றனர் எனவும் அமைச்சர் எடுத்துரைத்தார்.

குறிப்பாக தமிழகத்திலுள்ள பணபலம் படைத்த முதலாளிமார், அரசியல்வாதிகள் மீனவர்களை பகடைக்காயாக பயன்படுத்த முற்படுகின்றனர் எனவும், தமது வாழ்வாதாரம் பற்றி மட்டுமே அவர்கள் சிந்திக்கின்றனர் எனவும், வடக்கு மீனவர்களின் நிலை பற்றி சிந்திப்பதில்லை எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

எனவே, இந்திய மீனவர்களின் அத்துமீறலை தடுப்பதற்கு இந்திய ஒன்றிய மற்றும் தமிழக அரசுகள் காத்திரமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும், மீனவர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் எனவும் அமைச்சர் கோரிக்கை விடுத்தார்.

வடக்கு, கிழக்கு மற்றும் மலையக அபிவிருத்திக்காக இந்தியா வழங்கிவரும் ஒத்துழைப்புகளுக்கு நன்றி தெரிவித்த அமைச்சர், அவை தொடர வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தார். (நி-8)

## ஏற்றுமதி வருமானம் ஜனவரியில் அதிகரிப்பு




(கொழும்பு)

இலங்கையின் ஏற்றுமதி வருவாய் 2025ஆம் ஆண்டின் ஜனவரி மாதத்தில் 1.3 பில்லியன் டொலரைக் கடந்துள்ளதாக இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை தெரிவித்துள்ளது.

கடந்த 2024ஆம் ஆண்டு ஜனவரி மாதத்துடன் ஒப்பிடும்போது, பொருட்கள் ஏற்றுமதி வருவாயில் 3.51 சதவீத அதிகரிப்பும், விவசாய ஏற்றுமதி வருவாயில் 14.87 சதவீத அதிகரிப்பும் ஏற்பட்டுள்ளதாக இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை தெரிவித்துள்ளது.

தொழிற்றுறை ஏற்றுமதி வருவாயில் 0.08 சதவீதமும் சேவை ஏற்றுமதி வருவாயில் 37.87 சதவீதமும் வளர்ச்சி ஏற்பட்டுள்ளது.

அதன் பிரகாரம் இந்த ஆண்டு ஜனவரியில் பொருட்கள் மற்றும் சேவைகள் உட்பட மொத்த ஏற்றுமதி வருவாய் 1,334.19 மில்லியன் அமெரிக்க டொலராக பதிவாகியுள்ளது. இது நிலையான பொருளாதார வெற்றிக்கு வழிவகுக்கும் என இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை தெரிவித்துள்ளது. (நி-8)

### ஜப்பான் வெளிவிவகார அமைச்சரை

## சந்தித்த விஜித ஹேரத்



(கொழும்பு)

இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத்திற்கும் ஜப்பான் வெளிவிவகார பிரதி அமைச்சர் அகிகோ இகுவினாவுக்கும் இடையிலான சந்திப்பு ஜெனீவாவில் நேற்றுப் புதன்கிழமை இடம்பெற்றது.

வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் ஐக்கிய நாடுகள் பேரவையின் கூட்டத்தொடரில் பங்கேற்பதற்காக ஜெனீவாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ள நிலையில், இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

## எதிர்க்கட்சித் தலைவரை சந்தித்த அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர்

(கொழும்பு)

இலங்கைக்கான அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் போல் ஸ்டீபன்ஸ் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச ஆகியோருக்கிடையிலான விசேட சந்திப்பொன்று நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பாராளுமன்றத்திலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இச்சந்திப்பில், இலங்கைக்கான அவுஸ்திரேலிய பிரதி உயர்ஸ்தானிகர் லலிதா கபூர் மற்றும் அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகராலயத்தின் இரண்டாவது செயலாளர் மேத்யூ லார்ட் ஆகியோர் பங்கேற்றனர்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கும் அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகருக்கும் இடையில் நாட்டில் நிலவும் பல்வேறு சமூக, பொருளாதார மற்றும் அரசியல் விடயங்கள் தொடர்பில் இங்கு நீண்டநேரம் கருத்துப் பரிமாற்றம் இடம்பெற்றுள்ளது.

தற்போதைய அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்டுள்ள வரவு செலவுத் திட்டம் குறித்தும், விரைவில் நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தல் குறித்தும் எதிர்க்கட்சித் தலைவர் உயர்ஸ்தானிகருக்கு இதன்போது தெளிவூட்டினார்.


மேலும் தற்போதைய நிலையில் இருந்து நாட்டை மீட்டெடுக்கத் தேவையான ஒத்துழைப்புகளைத் தொடர்ந்து பெற்றுத் தருமாறும் அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகரிடம் எதிர்க்கட்சித் தலைவர் மேலும் கோரிக்கை விடுத்தார். (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளையாட்டுச் செய்திகள்

# சச்சினின் சாதனையை எட்டுவார் கோலி

# நம்பிக்கை வெளியிட்டார் பொண்டிங்



“ஒருநாள் போட்டியில் கோலியை விட சிறந்த வீரரை பார்த்ததில்லை. அதிக ரன் எடுத்து, சச்சின் சாதனையை எட்டுவார்” என பொண்டிங் தெரிவித்தார்.

துபாயில் நடந்த சம்பியன்ஸ் டிராபி “ஏ” பிரிவு லீக் போட்டியில் இந்திய அணி, பாகிஸ்தானை வீழ்த்தி அரையிறுதிக்கு முன்னேறியது. சதம் விளாசிய கோலி, இந்திய வெற்றிக்கு வித்திட்டார்.

ஒருநாள் அரங்கில் அதிக ரன் எடுத்தவர் பட்டியலில் கோலி மூன்றாவது இடத்தில் உள்ளார். முதலிடத்தில் சக வீரர் சச்சின் நீடிக்கிறார்.

குமார் சங்கக்காரவை முந்த கோலிக்கு இன்னும் 150 ரன் தேவை. சச்சின் சாதனையை எட்ட 4,341 ரன் தேவை. ஏற்கனவே அதிக சதம் அடித்தவர் பட்டியலில் சச்சினை முந்தி முதலிடம் பெற்றார் கோலி. தற்போது 36 வயதாகும் இவர், தொடர்ந்து அசத்தும் பட்சத்தில் அதிக ரன் எடுத்து சாதிக்கலாம்.

இது பற்றி அவுஸ்திரேலிய முன்னாள் கப்டன் பொண்டிங் தெரிவிக்கையில்,


ஒருநாள் அரங்கில் அதிக ரன் எடுத்த வீரர்கள் பட்டியலில் முதலில் என்னை முந்தினார் கோலி. இவருக்கு முன்னதாக தற்போது சச்சின், சங்கக்கார மட்டுமே உள்ளனர். அதிக ரன் எடுத்தவராக சாதனை படைக்க நிச்சயம் விரும்புவார். 50 ஓவர் போட்டியில் இவரைவிட சிறந்த வீரரை நான் பார்த்தது இல்லை. உடல் அளவில் “பிட்” ஆக உள்ளார். மிக நீண்ட காலம் விளையாடியும் சச்சினைவிட 4,341 ரன் பின்தங்கியுள்ளார். இது சச்சினின் திறமையை உணர்த்துகிறது. கோலிக்கு இன்னும் ரன் தாகம் இருக்கும்பட்சத்தில், சச்சினை முந்தி சாதனை படைக்கலாம்.

பாகிஸ்தானுக்கு எதிராக எப்போதும் சிறப்பாக விளையாடுவார் கோலி. 2022 இல் “ரி-20” உலக கோப்பையில் 82 ரன் எடுத்து அசத்தினார்.

சம்பியன்ஸ் டிராபியிலும் கைகொடுத்துள்ளார். டுபாய் ஆடுகளத்தில் “டாப்-ஆர்டர்” பேட்டர் ஒருவர் நிலைத்து நின்று ஆடினால் வெற்றி வசப்படும் நிலை இருந்தது. இந்த சூழலில் மீண்டும் கோலி மிரட்டினார். “சம்பியன்” வீரர் என்பதை நிரூபித்தார்.

50 ஓவர் போட்டியில் அசைக்க முடியாத வீரராக திகழ்கிறார். இவரது சதம் தான் இந்தியா-பாகிஸ்தான் இடையே வித்தியாசத்தை ஏற்படுத்தியது. இரு அணிகளின் “ஸ்கோர் கார்டை” பார்த்தால், கோலியின் 100 ரன் தனித்துவமாகத் தெரியும்.


பொதுவாக 50 ஓவர் போட்டியில் வலுவான ஸ்கோர் எடுப்பது அவசியம். ஆனால், பாகிஸ்தான்




அணியில் ஒருவர் கூட பெரிய ஸ்கோரை எட்டவில்லை. சிறந்த “பார்ட்னர்ஷிப்பும்” அமைக்கவில்லை. அனுபவ பாபர் ஆசம், கப்டன் ரிஸ்வான் சோபிக்க தவறினர். முதல் இரு போட்டிகளில் இவர்கள் பெரிய அளவில் ரன் குவிக்கவில்லை. இதன் காரணமாகவே பாகிஸ்தான் அரையிறுதி வாய்ப்பை இழந்தது. (நி-8)

# பாகிஸ்தான் வெளியேறியது திட்டமிட்ட சதி

# முன்னாள் கப்டன் ரமீஸ் ராஜா சாடல்





பாகிஸ்தான் பலம் குன்றிய பங்களாதேஷை தான் முதல் லீக் ஆட்டத்தில் எதிர்கொண்டு இருக்க வேண்டும்.

குறைந்தபட்சம் இந்தியாவுக்கு எதிராக முதல் போட்டியில் பாகிஸ்தான் விளையாடி இருக்க வேண்டும்.

சம்பியன்ஸ் டிராபி தொடரில் பாகிஸ்தான் அணி தாங்கள் எதிர்கொண்ட முதல் போட்டியில் நியூசிலாந்து இடமும் அடுத்த போட்டியில், இந்தியாவிடமும் தோல்வியைத் தழுவி தொடரை விட்டு வெளியேறியது.

பாகிஸ்தான் அணியின் தோல்விக்கு காரணம் பட்டிங் மற்றும் பந்துவீச்சு பில்டிங் என அனைத்துமே சொதப்பியதுதான். குறிப்பாக நியூசிலாந்து அணிக்கு எதிரான ஆட்டத்தில் பாகிஸ்தான் அணி அதிக அளவு டாட் பால்களை சந்தித்து 60 ரன்கள் வித்தியாசத்தில் தோல்வியைத் தழுவியது.

இந்த நிலையில் ஒட்டுமொத்த கிரிக்கெட் வல்லுநர்களும் பாகிஸ்தான் அணியின் செயற்பாட்டை விமர்சித்து வந்த நிலையில் அந்த அணியின் முன்னாள் கப்டன் ரமீஸ் ராஜா மட்டும் ஐ.சி.சியை விமர்சித்திருக்கிறார்.

இது குறித்து அவர் கூறியதாவது, பாகிஸ்தான் அணி தங்களுடைய முதல் ஆட்டத்தை நியூசிலாந்துக்கு எதிராக விளையாடுவது எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. எப்படி இதுபோல் அட்டவணை அமைக்கப்பட்டது. பாகிஸ்தான் பலம் குன்றிய பங்களாதேஷைத் தான் முதல் லீக் ஆட்டத்தில் எதிர்கொண்டு இருக்க வேண்டும். பங்களாதேஷ் தற்போது நன்றாக விளையாடி வந்தாலும் நமது வீரர்களுக்கு கொஞ்சம் எளிதாக இருந்திருக்கும்.

ஆனால் முதல் போட்டியில் நியூசிலாந்துக்கு எதிராக விளையாடி நாம் தோல்வியைத் தழுவி விட்டோம். இதன் மூலம் கடும் நெருக்கடி நமது வீரர்களுக்கு ஏற்பட்டு விட்டது. பாகிஸ்தான் அணி ஏன் பங்களாதேஷுக்கு எதிராக தங்களுடைய முதல் போட்டியை விளையாடவில்லை.

குறைந்த பட்சம் இந்தியாவுக்கு எதிராக முதல் போட்டியில் பாகிஸ்தான் விளையாடி இருக்க வேண்டும். அப்படி நடந்திருக்கும் பட்சத்தில் இரண்டு அணிகளுக்குமே சமமான அளவில் கடும் நெருக்கடி ஏற்பட்டு இருக்கும் என்று ரமீஸ் ராஜா கூறியுள்ளார். (நி-8)

# பயிற்சியாளரின் கழுத்தை பிடித்து இழுத்த மெஸ்ஸி

இன்டர் மியாமிக்கு எதிரான ஸ்போர்ட்டிங் கன்சாஸ் சிட்டி போட்டியில் எதிரணி பயிற்சியாளரின் கழுத்தை பிடித்து இழுத்ததற்காக முன்னணி கால்பந்து நட்சத்திரம் லியோனல் மெஸ்ஸிக்கு, வெளிப்படுத்தப்படாத தொகை அபராதமாக விதிக்கப்பட்டது.

மேஜர் லீக் ஒழுங்கு முறைக் குழுவால் இந்த அபராதம் விதிக்கப்பட்டது.

இன்டர் மியாமு மற்றும் ஸ்போர்ட்டிங் கன்சாஸ் சிட்டி போட்டியில் லியோனல் மெஸ்ஸியின் செயல் வீடியோ சமூக ஊடகங்களில் பரவலாகப் பகிரப்பட்டது.


அந்த வீடியோ காட்சிகள் மெஸ்ஸி பயிற்சியாளரை நெருங்கி அவரது கழுத்தின் பின்புறத்தைப் பற்றிக் கொண்டிருப்பதைக் காட்டியது.

நேற்று முன்தினம் மியாமியில் நடந்த 2-2 என்ற சமநிலை போட்டியின் பின்னரான அவரது செயல் மெஸ்ஸியை எட்டு முறை பலோன் டி'ஓர் விருதில் இருந்து விலகச் செய்தமை குறிப்பிடத்தக்கது. (நி-8)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





வரலாற்றுச் சிறப்பு மிக்க கீரிமலை நகுலேஸ்வரம் நகுலாம்பிகாதேவி சமேத நகுலேஸ்வரர் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவத்தின் தேர்த்திருவிழா நேற்று பக்திபூர்வமாக இடம் பெற்றது.

இதன்போது பல அடியவர்கள் கலந்து கொண்டு தமது நேர்த்திக் கடன்களில் ஈடுபட்டு இருந்தனர்.

(படங்கள்-சிவசாந்தன்)

# சேவைகள் ஏற்றுமதி வரியை அமுல்படுத்த நடவடிக்கை

## அமைச்சர் நலிந்த ஜயதிஸ்ஸ



(கொழும்பு)

தற்போதைய சூழ்நிலையில் சேவைகள் ஏற்றுமதி வரியை அமுல்படுத்துவதைத் தவிர அரசாங்கத்திற்கு வேறு வழியில்லை என அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் வாராந்திர அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போது இதனைக் கூறிய அவர், இதற்கு முன்னர் அதிக வரிவிதிப்பு முன்மொழியப்பட்டதாகவும் சுட்டிக்காட்டினார்.

சேவைகள் ஏற்றுமதி வரியை அமுல்படுத்தாவிட்டால், மக்கள் இன்னும் கடுமையான வரியை எதிர்கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுவார்கள்.

அரசாங்க வருவாயை அதிகரிப்பதற்காக பொதுமக்களுக்கு மேலும் சுமையை ஏற்படுத்தாமல் வரையறுக்கப்பட்ட வரி முறையை அமுல்படுத்த வேண்டும்.

இது தொடர்பாக நிதியமைச்சகம் ஏதேனும் சலுகைகள் வழங்க முடியுமா என்பதை நாங்கள் பரிசீலிப்போம்.

அரசாங்கத்தின் 2025 வரவு-செலவுத் திட்டம், வெளித்தரப்பினருக்கு சேவைகளை வழங்கி அந்நிய செலாவணியை திரும்பக் கொண்டு வரும் இலங்கையில் உள்ள தனிநபர்கள் மற்றும் பெரு நிறுவனங்களுக்கு 15 சதவீத சேவை ஏற்றுமதி வரியை 2025 ஏப்ரல் 01 முதல் நடைமுறைப்படுத்துவதற்கு கோடிட்டுக் காட்டுவதாகவும் அவர் தெரிவித்தார். (நி-8)

# கொலை நடந்த கையோடு நகை கடைக்கு சென்ற செவ்வந்தி

(கொழும்பு)

கணேமுல்ல சஞ்சீவ கொலையில் மூளையாக செயற்பட்டவராக அடையாளம் காணப்பட்டுள்ள இஷார செவ்வந்தியின் சகோதரரின் வங்கிக் கணக்கில் கொலையை திட்டமிட்ட கெசல்பத்தர பத்மே என்ற நபர் ஒரு லட்சம் ரூபாயை வரவு வைத்துள்ளதாக தெரியவந்துள்ளது.

கடந்த 19 ஆம் திகதி கணேமுல்ல சஞ்சீவ கொலை இடம்பெற்றதன் பின்னர் இந்த பணம் வரவு வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, கொலைக்குப் பிறகு, சந்தேக நபர் செவ்வந்தி, களுத்துறை நகரில் உள்ள ஒரு நகைக் கடையில் இருந்து 500,000 ரூபாய் மதிப்புள்ள தங்க நகைகளை வாங்கியிருப்பது தெரியவந்துள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இவ்வாறானதொரு பின்னணியில், இந்த கொலை வழக்கில் தேடப்படும் பிரதான சந்தேக நபர் செவ்வந்தியின் கைது செய்யப்பட்ட தாய் மற்றும் சகோதரரை எதிர்வரும் 7 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க கொழும்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த நிலையில், தற்போது, கணேமுல்ல சஞ்சீவ கொலையுடன் தொடர்புடைய 11 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டு விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. (நி-8)

## சிவனொளிபாதமலைப் பகுதியில் பாரிய காட்டுத் தீ

# 30 ஏக்கர் காடு எரிந்து நாசம்


(கொழும்பு)

சிவனொளிபாதமலைப் பகுதியில் ஏற்பட்ட பாரிய தீ பரவலினால் சுமார் 30 ஏக்கர் காடு எரிந்து நாசமாகியுள்ளதாக வனப்பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நல்லதண்ணி வாழைமலைப் பகுதியில் கடந்த 23 ஆம் திகதி மாலை ஏற்பட்ட காட்டுத்தீயானது, அதிக வெப்பமான நிலையினால் வேகமாகப் பரவி, சிவனொளிபாத மலைத் தொடர் வரை தீப்பரவல் ஏற்பட்டது. தீயைக் கட்டுப்படுத்த இராணுவத்தினர், நல்லதண்ணி பொலிஸார் மற்றும் நல்லதண்ணி வனப்பாதுகாப்பு அதிகாரிகள் கடுமையாக முயற்சித்த போதும் தீப்பரவலைக் கட்டுப்படுத்த முடியாமற் போனது.

இந்நிலையில், நோர்வூட் பிரதேச செயலக செயலாளர் சமீர கம்லத் தலையீட்டினூடாக, கடந்த திங்கட்கிழமை மவுசாகலை நீர்த்தேக்கத்திலிருந்து விமானப் படைக்கு சொந்தமான பெல் 412 ரக விமானத்தின் மூலம் தீப்பரவல் பகுதிக்கு 11 தடவைகள் வானிலிருந்து நீர் பாய்ச்சப்பட்ட நிலையில் காட்டுத் தீப்பரவல் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டதாக ஹற்றன் வனப்பாதுகாப்பு பிரிவு அதிகாரி வீ.ஜே.ருக்ஷான் தெரிவித்தார்.

மேலும், மலையகத்தில் வெப்பமான காலநிலை தொடர்ந்து நிலவி வரும் நிலையில், இனம் தெரியாதோரால் காடுகளுக்கு தீ வைக்கும் விசம சம்பவங்களும் இடம்பெற்று வருவதாகவும் ஹற்றன் வனப்பாதுகாப்பு பிரிவு அதிகாரி தெரிவித்தார். (நி-8)



# இராசிபலன்

27.02.2025
மாசி 15, வியாழக்கிழமை
சதுர்த்தசி முற்பகல் 9.02 மணிவரை

அவிட்டம் பிற்பகல் 4.09 மணிவரை
சுபநேரம் 7.59-9.29 மணிவரை
இராகுகாலம் 1.59-3.29 மணிவரை
அமாவாசை விரதம்

சந்திராஷ்டமம்
பூசம், ஆயில்யம்.

வளவன்




இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், போசன சுகமுண்டு.




சமுதாயத்தில் உயர்ந்த நிலைக்கு வரத் தோன்றும், சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், எடுத்த காரியங்களில் உற்சாகம் காட்டுவீர்கள், பிறர் உதவியுண்டு.




தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், வழிபாட்டால் சிறப்பினைக் காண வேண்டிய நாள், பகை விலகி பாசம் கூடும் நாள், பயணங்களால் பலனுண்டு.




நேசித்த ஒருவருடன் யோசித்துப் பேசும் சூழ்நிலை ஏற்படலாம், மருத்துவச் செலவுகள் ஏற்படலாம், வீண் விரயங்கள் ஏற்படலாம், எடுத்த காரியங்களில் சிறு தடை தாமதங்கள் ஏற்படலாம்.




உறவினர், நண்பர்களின் வருகையால் சிந்தை மகிழ்வீர்கள், மனதிற்கினிய சம்பவங்கள் இடம்பெறலாம், சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், போசன சுகமுண்டு.




முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், குல தெய்வ வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், இனத்தார் பகை மாறி இன்பங்கள் கூடும் நாள், கௌரவமான நாள்.




தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கப் பெறுவீர்கள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், நிதி நிலை உயர்ந்து நிம்மதி கிடைக்கும் நாள்.




விலை உயர்ந்த பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள், நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும் வாய்ப்புண்டு, வாகன சுகமுண்டு, சுப செய்திகள் வந்து சேரலாம்.




பாகப் பிரிவினைகள் சுமுகமாக அமையும், வியாபார விரோதம் விலகும், விருப்பங்கள் நிறைவேற வழிபாட்டை மேற்கொள்ள வேண்டிய நாள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.




பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், பொது வாழ்வில் புகழ்கூடும், அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும், அதிஷ்ட வாய்ப்புக்கள் அலைமோதும் நாள்.




சான்றோர்களின் சந்திப்பால் சந்தோசமடைவீர்கள், விருப்பங்கள் நிறைவேற இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், ஆழ்ந்த சிந்தனையுண்டு, போசன சுகமுண்டு.




தொழிலில் உடனிருப்பவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது, எப்படி நடக்குமோவென நினைத்த காரியம் நல்லவிதமாக அமையலாம், சுப விரயங்கள் அதிகரிக்கும் நாள்.

எப்போதும் உண்மையை மறைக்காத மன உறுதி வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனை தறிப்புக்கான அனுமதி; மீள் நடுகை தொடர்பிலும் ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

பனைமரம் தறிப்பதற்கான கட்டுப்பாட்டுச் சட்டம் மற்றும் அனுமதி தொடர்பாகவும் தறிக்கப்படுகின்ற பனைமரங்களுக்கான மீள் நடுகை செயற்றிட்டம் தொடர்பான கலந்துரையாடலும் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் ம.பிரதீபன் தலைமையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாவட்ட செயலக அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நடைபெற்றது.



இங்கு கருத்து தெரிவித்த அரசாங்க அதிபர், அனர்த்தம் ஏற்படக்கூடிய பனைமரங்கள் காணப்படுமாயின் ஐந்துபேர் கொண்ட குழுவொன்றினை அமைத்து அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு அவற்றினைத் தறிப்பதற்கான அனுமதியும் அரச , அரச சார்பற்ற வீட்டுத்திட்டம் என்பவற்றினால் பிரதேச செயலகங்களினூடாக வழங்கப்படும் வீட்டுத்திட்டங்களுக்கு நிபந்தனைகளுடன் பனைமரம் தறிப்பதற்கு அனுமதி வழங்குமாறும் தெரிவித்தார்.

மேலும் பனை அபிவிருத்தி சபைக்கு ஆலோசனை வழங்கியதுடன், பனை அபிவிருத்தி சபையினால் யாழ்.மாவட்டத்தில் பனம் விதை நடுவதற்கான இடங்கள் காணப்படுமாயின் அதற்கான இடஅமைவு தொடர்பான விடயத்தினை பிரதேச செயலாளர்களை அறிக்கையிடுமாறும் தெரிவித்தார்.

பனைமரம் தறிப்பதற்கான கட்டுப்பாட்டுச்சட்டம் மற்றும் அனுமதி தொடர்பாக பிரதேச செயலாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் அதற்கான உடனடித் தீர்வுகள் தொடர்பான விடயங்களும் ஆராயப்பட்டன.

இக் கலந்துரையாடலில் பனை அபிவிருத்தி சபைத் தலைவர் வி.சகாதேவன் மேலதிக அரசாங்க அதிபர் (காணி) க.ஸ்ரீமோகனன், உதவி மாவட்ட செயலாளர் செல்வி. உ.தர்சினி, பிரதேச செயலாளர்கள், பனைஅபிவிருத்தி சபையின் முகாமையாளர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். (6-8-33)

# ரூ.12 லட்சம் பெறுமதியான நான்கு மோட்டர்கள் மீட்பு

## மூவர் கைது

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நுணாவில் பகுதியில் கடந்த சில வாரங்களுக்கு முன்னர் திருடப்பட்ட 12 இலட்சம் ரூபாய் பெறுமதியான நான்கு மோட்டர்களை கடந்த 24 ஆம் திகதி திங்கட்கிழமை சாவகச்சேரிப் பொலிஸார் மீட்டிருப்பதுடன் திருட்டுச் சந்தேக நபர்கள் இருவர் உட்பட மூவரை கைது செய்துள்ளனர்.

நுணாவில் பகுதியில் அமைந்துள்ள சீமெந்துத் தொழிற்சாலை ஒன்றில் இருந்த மோட்டர்களே இவ்வாறு திருடப்பட்ட நிலையில் சாவகச்சேரிப் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் அடிப்படையில் மீட்கப்பட்டுள்ளது.



திருடப்பட்ட மோட்டர்கள் யாழ்ப்பாணம்-நாயன்மார் கட்டுப் பகுதியில் விற்கப்பட்டிருந்த நிலையில் பொலிஸார் அதனை கொள்வனவு செய்த நபரையும் திருட்டுச் சந்தேக நபர்கள் இருவரையும் கைது செய்துள்ளனர்.

சாவகச்சேரிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பாலித செனவிரட்ன தலைமையிலான பொலிஸ் குழுவினரே மேற்படி கைது நடவடிக்கையை முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (6-8-30)

# ஆளுநர் அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடல்



(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண ஆளுநர், மாகாண பிரதம செயலர், மாகாண சுகாதார அமைச்சின் செயலர், மாகாண சுகாதார அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலர், மாகாண சுதேச வைத்தியத்துறைத் திணைக்கள ஆணையாளர் ஆகியோருக்கும் அரச சித்த மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினருக்கும் இடையிலான கலந்துரையாடல் ஆளுநர் செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில், மாகாண ஆணையாளர் பதவி மற்றும் பிரதி ஆணையாளர் பதவி என்பன அகில இலங்கை ரீதியாக விண்ணப்பம் கோரப்பட்டு ஒளிவு மறைவு இன்றி நேர்முகப்பரீட்சை நடைபெற்று பதவிகள் வழங்கப்பட வேண்டும் என்று சங்கத்தால் முன்வைக்கப்பட்ட கோரிக்கை ஆளுநரால் ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன், இந்தக் கோரிக்கையில் உறுதியாக இருந்தால் அதைச் செயற்படுத்துவதாக பிரதமசெயலர் சங்கத்தினருக்கு பதிலளித்தார்.

சிரேஷ்ட சமூக மருத்துவ அதிகாரி, மருத்துவ அத்தியட்சகர் மற்றும் மருத்துவ பொறுப்பதிகாரி நியமனங்கள் தொடர்பிலும் சங்கத்தினரால் சுட்டிக்காட்டப்பட்டது.

மேலும் வருடாந்த இடமாற்றத்தில் இழைக்கப்படும் அநீதிகள் தொடர்பிலும் இந்தச் சந்திப்பில் சங்கப் பிரதிநிதிகளால் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. அதுவும் சீர் செய்யப்படும் என பிரதமசெயலர் பதிலளித்தார்.

மருத்துவமனைகளின் அபிவிருத்தி தொடர்பாகவும் சில கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன. அவை தொடர்பில் கவனம் செலுத்துவதாக ஆளுநர் குறிப்பிட்டார்.

இலங்கையில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் தவிர ஏனைய மாகாணங்களில் மாகாண சித்த மருத்துவத் திணைக்களம் என்றே உள்ள நிலையில் வடக்கு, கிழக்கில் மாகாண சுதேச வைத்தியத் துறைத் திணைக்களம் என உள்ளதை மாற்ற வேண்டும்எனக் கோரிக்கை முன் வைத்தனர். இது தொடர்பில் ஆராயலாம் என ஆளுநர் இதன் போது தெரிவித்தார். (6-8)

# மீளவும் தனங்கிளப்புப் பகுதியில் உப தபாலகத்தை மாற்றுங்கள்

## கிராம மக்கள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

80 வருடங்கள் பழைமை வாய்ந்த சாவகச்சேரி- தனங்கிளப்பு உப தபாலகத்தை தன்னிச்சையாக இடம்மாற்றிய செயற்பாட்டிற்கு தனங்கிளப்பின் பொது அமைப்புக்கள் கண்டனம் தெரிவித்திருப்பதுடன் இது தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரனுக்கு கடிதம் ஒன்றினையும் அனுப்பி வைத்துள்ளனர்.

தனங்கிளப்பு கிராம அபிவிருத்திச் சங்கம், தனங்கிளப்பு இளைஞர் கழகம், புதிய மலரும் மொட்டுக்கள் சிறுவர் கழகம், தனங்கிளப்பு மகளிர் விவகார குழு மற்றும் தனங்கிளப்பு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் ஆகிய பொது அமைப்புக்களே மேற்படி விடயம் தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினரின் கவனத்திற்கு கொண்டு சென்றுள்ளன.

குறித்த கோரிக்கை கடிதத்தில்,

தனங்கிளப்பு உப அஞ்சல் அலுவலகம் 18.02.2025 அன்று பொதுமக்கள் மற்றும் கிராமத்தின் பொது அமைப்புக்களுக்கு அறிவிக்காமல் உழவியந்திர உதவியுடன் பொருட்கள் ஏற்றப்பட்டு மறவன்புலோ கிராமத்திற்கு இடம் மாற்றப்பட்டுள்ளது.

இது தொடர்பாக உப அஞ்சல் அலுவலரை வினவிய போதிலும் அவருக்கும் அது தொடர்பாக அறிவிக்கவில்லை எனத் தெரிவித்திருந்தார்.

தனங்கிளப்பு ஏ32 வீதியோரம் 80 வருட காலமாக இவ் உப அஞ்சல் அலுவலகம் காணப்பட்டது. தற்போது உப அஞ்சல் அதிபுர் பிரசவ விடுமுறையில் இருப்பதனை சாதகமாக பயன்படுத்தி முன் அறிவித்தல் இன்றி உப அஞ்சல் அலுவலகம் வேறு கிராமத்திற்கு இடம்மாற்றப்பட்டுள்ளது.

இதனால் தனங்கிளப்பு பகுதியில் உள்ள பொதுமக்கள் மற்றும் முதியவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த காலங்களிலும் தனங்கிளப்பில் இருந்த உப தபால் நிலையத்தை வேறு கிராமத்திற்கு மாற்ற முயற்சி எடுக்கப்பட்ட போதிலும் கிராம மக்களின் எதிர்ப்பால் அது கைவிடப்பட்டிருந்தது.

மீளவும் தனங்கிளப்பு பகுதியில் உப அஞ்சல் அலுவலகத்தை இயக்க வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர்கள் தமது கோரிக்கையில் குறிப்பிட்டிருந்தனர்.

மேலும் கடிதப் பிரதிகளை வடக்கு மாகாண ஆளுநர், தபால் திணைக்கள அதிகாரிகள் ஆகியோருக்கும் அனுப்பி வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-8-30)

## சுண்ணக்கல்லுடன் டிப்பர் பறிமுதல்

### ஒருவர் கைது

(சாவகச்சேரி)

உரிய அனுமதிப்பத்திரம் இன்றி சுண்ணாம்புக்கல் ஏற்றிச் சென்ற டிப்பர் வாகனத்தை நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அதிகாலை வேளையில் சாவகச்சேரிப் பொலிஸார் மடக்கிப் பிடித்ததுடன் சந்தேக நபர் ஒருவரையும் கைது செய்துள்ளனர்.

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மட்டுவில் பன்றித் தலைச்சி அம்மன் கோவில் வீதி ஊடாக சுண்ணாம்புக்கற்களை ஏற்றிச் சென்ற வேளையிலேயே மேற்படி கைது நடவடிக்கையை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (6-8-30)

# பொதுமக்கள் குறைகேள் சந்திப்பு நெடுந்தீவில்

(யாழ்ப்பாணம்)

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாண பிராந்திய அலுவலகத்தின் ஏற்பாட்டில் நெடுந்தீவு பிரதேசத்தில் பொதுமக்கள் குறைகேள் சந்திப்பு நடைபெறவுள்ளது.

நெடுந்தீவு கலாசார மண்டபத்தில் நாளை வெள்ளிக்கிழமை காலை 11 மணியளவில் நடைபெறவுள்ள பொதுமக்கள் குறைகேள் சந்திப்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர் உட்பட அதிகாரிகள் கலந்து கொள்ளவுள்ளனர்

எனவே நெடுந்தீவு வாழ் பொதுமக்களும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகளும் கலந்து கொள்ளுமாறு யாழ். பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ் தெரிவித்துள்ளார். (6-8-33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒதுக்கப்பட்டுள்ள நிதியை
## வினைத்திறனாகப் பயன்படுத்துமாறு பணிப்பு

(கொழும்பு)

**வரவு- செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ள நிதியை வினைத்திறனாகவும் பயனுள்ள மற்றும் நியாயமான முறையில் பயன்படுத்த வேண்டும் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அரசாங்க அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.**



ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மற்றும் அமைச்சுக்களின் செயலாளர்களுக்கு இடையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

குறித்த சந்திப்பில் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க, பிரதமரின் செயலாளர் ஜீ.பீ. சபுதந்திரி உள்ளிட்டவர்களும் இதன்போது கலந்துகொண்டனர்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

வரையறுக்கப்பட்ட நிதிக் கட்டமைப்புக்குள் இருந்தாலும் அபிவிருத்தி மற்றும் மக்களின் தேவைகளை அறிந்து கொண்டு இம்முறை வரவு - செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன.

எனவே, அந்த நிதியை வினைத்திறனாகவும் பயனுள்ள மற்றும் நியாயமான முறையில் பயன்படுத்துவதும் அரசாங்க அதிகாரிகளின் பொறுப்பாகும்.

அரசாங்க சேவைகள் தொடர்பாக மக்கள் மத்தியில் நல்லதொரு எண்ணம் காணப்படவில்லையென தெரிவித்த ஜனாதிபதி, அரச சேவைக்குள் காணப்படும் வினைத்திறன் இன்மையே அதற்கு காரணமெனவும் சுட்டிக்காட்டினார்.

அதேபோல் அரச ஊழியர்களிடையே காணப்படும் திருப்தியின்மையே வினைத்திறன் இல்லாமைக்கு காரணமாக அமைந்துள்ளதெனவும் அந்த பிரச்சினைகளைத் தீர்த்து அரச சேவையின் வினைத்திறனை மேம்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி மற்றும் அமைச்சரவை உள்ளிட்ட அரசியல் அதிகாரத் தரப்பும் செலவுகளை குறைத்திருக்கும் நிலையில், அரச நிறுவனங்களின் நிர்வாகச் செலவை குறைத்தல் மற்றும் விரயத்தை குறைத்தல் என்பன அரச சேவையின் பொறுப்பாகும்.

மேலும் அரச சேவையின் செலவுகளைக் குறைப்பதற்காக அரசாங்க அலுவலகங்கள் அனைத்தையும் அரசாங்க கட்டடங்களுக்கு கொண்டு வருதல், அதிக பராமரிப்புச் செலவுடன் கூடிய வாகனங்களை மார்ச் மாதமளவில் ஏல விற்பனை செய்யும் திட்டம், பாவனை செய்யாத அலுவலக உபகரணங்களை ஒதுக்குதல், மூடப்பட வேண்டிய நிறுவனங்கள், ஒருங்கிணைக்கப்பட வேண்டிய நிறுவனங்கள் மற்றும் அரச, தனியார் கூட்டிணைவுக்கு வழங்க வேண்டிய நிறுவனங்களை அறிந்துகொண்டு அதற்காக மேற்கொள்ள வேண்டிய துரித நடவடிக்கைகள் குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

## மினுவாங்கொடையில் துப்பாக்கிச் சூடு

(கொழும்பு)

மினுவாங்கொடை, பதண்டுகொட பகுதியில் நேற்றுக் காலை துப்பாக்கிச் சூட்டு சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது.

இந்தத் துப்பாக்கிச் சூட்டில் நபரொருவர் காயமடைந்துள்ளதாக மினுவாங்கொடை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஆரம்ப கட்டத் தகவலின்படி, மோட்டார் சைக்கிளில் வந்த அடையாளம் தெரியாத இருவர் இந்தத் துப்பாக்கிச் சூட்டினை முன்னெடுத்து. தப்பிச் சென்றுள்ளனர்.

சம்பவத்தில் காயமடைந்த 36 வயதுடைய நபர் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சந்தேக நபர்களை அடையாளம் கண்டு கைது செய்யவும் துப்பாக்கிச் சூட்டுக்கான காரணத்தை கண்டறியவும் பொலிஸார் விசாரணையை ஆரம்பித்துள்ளனர். (நி-8)

## செவ்வந்தியின் உருவமைப்பில் உள்ள யுவதி கைது

(கொழும்பு)

கணேமுல்ல சஞ்ஜீவவின் கொலைச் சம்பவத்தின் பிரதான சந்தேக நபராகக் கருதப்படும் இஷாரா செவ்வந்தி என்பவரின் உருவத்திற்கு இணையான யுவதி ஒருவர் மத்துகம பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

கைது செய்யப்பட்ட குறித்த பெண் எதிர்வரும் மார்ச் 14 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

23 வயதான குறித்த யுவதி மத்துகம பகுதியில் உள்ள தமது வீட்டிற்கு அருகிலுள்ள வனப் பகுதியில் மறைந்திருந்ததாகவும் அப்போது அவர் கைது செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில், குறித்த யுவதியின் கையடக்க தொலைபேசியைப் பரிசோதனை செய்வதற்காக நீதிமன்றத்திடம் உத்தரவைப் பெற்று அடுத்த கட்ட விசாரணைகளை முன்னெடுக்கவுள்ளதாகவும் கூறப்படுகின்றது. (நி-8)

## 12 மில்லியன் ரூபா பெறுமதியான போதைப்பொருளுடன் பெண் கைது

(கொழும்பு)

குஷ் போதைப்பொருளுடன் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

38 வயதான குறித்த பெண் தாய்லாந்திலிருந்து ஹொங்கொங் ஊடாக நேற்று அதிகாலை நாட்டை வந்தடைந்துள்ளார்.

அவர் தமது பயணப்பைக்குள் ஒரு கிலோ 200 கிராம் போதைப் பொருளை மிகவும் சூட்சுமமான முறையில் மறைத்துக் கொண்டு வந்துள்ளதாக சுங்கம் தெரிவித்தது.

கைப்பற்றப்பட்ட குஷ் போதைப் பொருளின் பெறுமதி 12 மில்லியன் ரூபாவாகும்.

சந்தேகநபரான பெண் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (நி-8)


## கல்யாணமாலை
### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு:1994 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா: 30<br>உயரம்:5' 6"<br>தகைமை/தொழில்:QS(PVT)<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/15167 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: அனுசம் 3 இல் சூரி செவ்<br>உயரம்: 5' 5"<br>தகைமை/தொழில்:A/L<br>எதிர்பார்ப்பு:வெளிநாடு<br>தொ.இ: G/14037 |
| பிறப்பு:1992 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை 7 இல் செவ்<br>உயரம்:5' 8"<br>தகைமை/தொழில: BSc,Senior Software Engineer(pvt)<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/15168 | பிறப்பு: 1996 RC<br>நட்சத்திரம்:அச்சுவினி 9 இல் சூரி செவ்<br>உயரம்:5' 3"<br>தகைமை/தொழில்:A/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு, அரச உத்தியோகம்<br>தொ.இ: G/14039 |
| பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 71<br>உயரம்: 5' 7"<br>தகைமை/தொழில்: Marketing, Senior Medical Executive(pvt)<br>எதிர்பார்ப்பு:படித்த பெண்<br>தொ.இ: B/15169 | பிறப்பு:1988 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 48<br>உயரம்:5<br>தகைமை/தொழில்:BA, MA, M.Phil<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்<br>தொ.இ: G/14042 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாரதம்

## அமெரிக்காவில் குடியேற பணக்காரர்களுக்கு வாய்ப்பு

### கோல்ட் கார்ட் திட்டத்தை அறிவித்தார் ட்ரம்ப்



(வோஷிங்டன்)

அமெரிக்காவில் புதிதாக குடியேறுபவர்களுக்கு அந் நாட்டு ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் புதிய கோல்ட் கார்ட் திட்டம் ஒன்றை அறிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதியாக ட்ரம்ப் பொறுப்பேற்ற முதல் நாளில் இருந்தே பல்வேறு அதிரடி அறிவிப்புக்களை வெளியிட்டு வருகிறார். தினமும் அவர் வெளியிடும் புதுப் புது அறிவிப்புகள் பரபரப்பை கிளப்பி வருகின்றது. அமெரிக்கா மீது அதிக வரி விதிக்கும் நாடுகளுக்கு அதிக வரி விதிப்பேன் என்று ட்ரம்ப் திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

இதற்கிடையே, அமெரிக்காவில் சட்டவிரோதமாக குடியேறி உள்ளவர்களை கண்டறிந்து நாடு கடத்தும் பணியும் முடுக்கி விடப்பட்டது. இந்நிலையில், அமெரிக்காவில் புதிதாக குடியேறுபவர்களுக்கு புதிய கோல்ட் கார்ட் திட்டம் ஒன்றை. ஜனாதிபதி ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

இந்த கோல்ட் கார்ட் புதிதாக குடியேறுபவர்களுக்கு 5 மில்லியன் டொலர்களுக்கு விற்கப்படும். இந்த அட்டை கிரீன் கார்டின் பிரீமியமாக இருக்கும் என ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

இது குறித்து ஓவல் அலுவலகத்தின் வர்த்தக செயலாளர் ஹோவர்ட் லுட்னிக் கூறியதாவது, இது குடியுரிமை பெறுவதற்கான ஒரு வழியாக இருக்கும். இந்த கோல்ட் கார்ட் வாங்குவதன் மூலம் பணக்காரர்கள் எல்லாம் நம் நாட்டிற்கு வருவார்கள். அவர்கள் நிறைய பணம் செலவழித்து, நிறைய வரிகளைச் செலுத்தி, நிறையப் பேருக்கு வேலைவாய்ப்பினையும் கொடுப்பார்கள்.

கோல்ட் கார்ட் விற்பனை இரண்டு வாரங்களில் தொடங்கும். இதை செய்வது முற்றிலும் சட்டபூர்வமானது என அவர் தெரிவித்தார்.(நி-8)

## காசா போர் நிறுத்...

## இன்னும் சில நா...

### அடுத்தகட்ட பேச்சுவார்...

(ஜெருசலேம்)

**காசாவில் முதல் கட்ட போர் நிறுத்தம் எதிர்வரும் ஒரு சில நாட்களில் முடிவடையவுள்ள நிலையில் இரண்டாம் கட்டத்திற்கான பேச்சுவார்த்தைகள் விரைவில் ஆரம்பிக்கப்படாத பட்சத்தில் அங்கு மீண்டும் போர் வெடிக்கும் அச்சுறுத்தல் அதிகரித்துள்ளது.**

கைதிகள் பரிமாற்ற உடன்படிக்கையின் கீழ் இஸ்ரேல் 620 பாலஸ்தீன கைதிகளை விடுவிப்பதை ஒத்திவைத்திருப்பதோடு, அந்தக் கைதிகள் விடுவிக்கப்படும் வரை இரண்டாம் கட்டப் போர் நிறுத்தத்திற்கு திரும்புவதில்லை என்று ஹமாஸ் எச்சரித்துள்ளது.

எனினும் கடந்த ஜனவரி 19 ஆம் திகதி அமுலுக்கு வந்த முதல் கட்டப் போர் நிறுத்தம் எதிர்வரும் மார்ச் மாத ஆரம்பத்தில் முடிவுக்கு வரவுள்ளது. இந்நிலையில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமைக்குள் இரண்டாம் கட்டத்திற்காக பேச்சுவார்த்தைகளை ஹமாஸ் மற்றும் இஸ்ரேல் ஆரம்பிக்க வேண்டி உள்ளது. இதற்கான முயற்சியில் மத்தியஸ்தத்தில் ஈடுபடும் கட்டார், எகிப்துடன் அமெரிக்காவும் ஈடுபட்டு வருகின்றது.

பணயக்கைதிகளை விடுவிப்பதற்கு ஹமாஸ் நடத்தும் நிகழ்ச்சிகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்தே இஸ்ரேல் பாலஸ்தீன கைதிகளை விடுவிப்பதை நிறுத்தியுள்ளது. எனவே அடுத்த பணயக் கைதிகளை ஹமாஸ் விடுவிக்கும் போதும் இவ்வாறான நிகழ்ச்சிகளை தவிர்ப்பது உறுதி செய்யப்பட்ட பின்னரே பாலஸ்தீன கைதிகள் விடுவிக்கப்படுவார்கள் என இஸ்ரேல் தெரிவித்துள்ளது.


முதல்கட்டப் போர் நிறுத்தத்தில் இதுவரை 25 இஸ்ரேலிய பணயக் கைதிகளை ஹமாஸ் அமைப்பு விடுவித்துள்ளது. இவர்களை விடு


விக்... த்து... தீன... நூற்... னில... றது.

இ... போ... கை... நல... உயி... கை... ஹம...



## ட்ரம்ப்-ஜெலன்ஸ்கி நாளை சந்திப்பு





உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பை நாளை சந்திக்க உள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. ரஷ்யாவுடனான போரின் போது உக்ரைனுக்கு அமெரிக்கா வழங்கிய உதவிகளுக்குப் பதிலாக அந்த நாட்டின் அரியவகை கனிமங்களை வெட்டி எடுக்கும் உரிமைகளைத் தங்களுக்குக் கால வரையறையில்லாமல் வழங்கப்பட வேண்டும் என ட்ரம்ப் வலியுறுத்தி வருகிறார்.

இது தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்துவதற்காக உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி அமெரிக்கா செல்கிறார். அப்போது இருநாட்டுத் தலைவர்களும் ரஷ்யாவுடனான போர் குறித்து பேச்சுவார்த்தை நடத்துவார்கள் என கூறப்படுகின்றது.

மேலும் அமெரிக்காவுடன் பொருளாதாரக் கூட்டாண்மையை உறுதி செய்வதற்காக கனிம ஒப்பந்தத்தில் ட்ரம்பும், ஜெலன்ஸ்கியும் கையெழுத்திடுவார்கள் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். ரஷ்யாவுக்கு எதிரான போரில் உக்ரைன் அமெரிக்காவின் தொடர்ச்சியான ஆதரவை பெறுவதற்கும், ட்ரம்ப் நிர்வாகத்துடன் உறவுகளை வலுப்படுத்துவதற்கும், நீண்ட கால அமெரிக்க பாதுகாப்பு உறுதிப்பாட்டுக்கு வழிவகுக்கும் வகையிலும் இந்த ஒப்பந்தம் அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த ஒப்பந்தத்தை ரஷ்யாவுடனான போர் நிறுத்தத்திற்கு முதல்படியாக அமெரிக்கா கருதுகிறது. (நி-8)

## சூடான் இராணு...


## 20 இற்கும் மே...

(கார்டூம்)

சூடான் இராணுவ விமானம் ஒன்று நேற்று முன்தினம் செவ்வாயன்று விபத்துக்குள்ளானதில் இராணுவ வீரர்கள், பொதுமக்கள் உட்பட 20 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

சூடானின் வடக்கு ஓம்டுர்மானில் உள்ள வாடி செய்ட்னா இராணுவ விமான நிலையத்திற்கு அருகிலுள்ள குடியிருப்புப் பகுதியில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

தொழில்நுட்பக் கோளாறு காரணங்களால் இந்த விமானம் விபத்துக்குள்ளானதாக இரா



னு... தன. இ... அறி... வீரர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வத்தம் முடிவடைய
# நாட்களே மீதம்!
## வார்த்தை இழுபறியில்



விக்கும் நிகழ்வு மேடை அமைத்து, ஆயுதம் ஏந்திய பாலஸ்தீன போராளிகள் சூழ்ந்து, நூற்றுக்கணக்கான மக்கள் முன்னிலையில் நடத்தப்பட்டு வருகிறது.

இந்நிலையில் முதல் கட்டப் போர் நிறுத்தத்தில் கடைசி கைதிகள் பரிமாற்றம் இன்று நடைபெறவுள்ளது. இதன்போது உயிரிழந்த நான்கு பணயக் கைதிகளின் உடல்களையே ஹமாஸ் வழங்கவுள்ளது.

இந்நிலையில் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு வேண்டுமென்றே போர் நிறுத்தத்திற்கு எதிராக செயற்பட்டு வருவதாக ஹமாஸ் உறுப்பினர் பசம் நயீம் குற்றம்சாட்டியுள்ளார்.

அல் ஜசீரா செய்தி நிறுவனத்திற்கு கடந்த திங்கட்கிழமை அளித்த பேட்டியில் அவர் கூறியதாவது,


'அடுத்த கட்டத்திற்கு செல்வதற்கு முன்னர், ஏற்கனவே விடுவிக்கப்பட வேண்டி இருக்கும் 620 பாலஸ்தீனக் கைதிகளையும் இஸ்ரேல் விடுவிப்பதை நாம் உறுதி செய்ய வேண்டியுள்ளது.

போர் நிறுத்தத்திற்கு எதிராக வேண்டுமென்று செயற்படுவது மற்றும் போருக்கு திரும்புவதற்கான சூழலுக்கு தயாராகி வரும் செய்தியை நெதன்யாகு தெளிவாக வெளிப்படுத்தி வருகிறார்' என்றார்.

விடுவிக்கப்பட வேண்டி இருக்கும் பாலஸ்தீன கைதிகளின் விடுதலைக்காக அவர்களின் குடும்பத்தினர் தொடர்ந்து காத்திருக்கின்றனர்.

காசாவில் போர் நிறுத்தம் அமுலில் இருந்தபோதும் இஸ்ரேல் ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையில் தனது படை நடவடிக்கையை தீவிரப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

# கொங்கோவில் வெளவாலை சாப்பிட்ட
## 48 மணி நேரத்தில் 55 பேர் மரணம்!



(கின்ஷாசா)

கொங்கோ நாட்டில் வெளவாலை சாப்பிட்டதால் பரவிய நோய்க்கு இதுவரை, 53 பேர் பலியாகி உள்ளனர்.

மத்திய ஆபிரிக்க நாடான கொங்கோவின் போலோகோ நகரில் கடந்த ஜனவரி 21 இல் மூன்று குழந்தைகள் வெளவாலை சமைத்துச் சாப்பிட்டுள்ளனர். அதை சாப்பிட்ட 48 மணி நேரத்தில் நோய் பாதிப்புக்கு ஆளாகி அவர்கள் இறந்தனர். அவர்களிடம் இருந்து இந்த நோய்த் தொற்று மற்றவர்களுக்கும் பரவி இருக்கலாம் என கூறப்படுகின்றது.

விலங்குகளை உண்ணும் பகுதிகளில் அவற்றிலிருந்து மனிதர்களுக்கு புதிய நோய்கள் பரவுவது கவலைக்குரிய விடயமாக உள்ளது. கடந்த 10 ஆண்டுகளில் ஆபிரிக்காவில் இது போன்ற நோய்ப் பரவல், 60 சதவீதத்திற்கு மேல் உயர்ந்துள்ளது.

தற்போது வெளவாலைச் சாப்பிட்டதால் ஏற்பட்டுள்ள நோய்ப் பரவலுக்கு இதுவரை 53 பேர் உயிரிழந்துள்ளதுடன் 419 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். காய்ச்சல், தலைவலி போன்ற அறிகுறிகள் தோன்றி, இரத்தநாளங்களில் கசிவு ஏற்பட்டு உயிரிழக்கின்றனர்.

இந்நோய் அறிகுறி தென்பட்ட, 48 மணி நேரத்துக்குள்ளேயே பெரும்பாலான உயிரிழப்பு ஏற்படுவது, மருத்துவர்களுக்கே சவாலாக உள்ளது.

இந்நோயினால் பாதிக்கப்பட்ட 13 பேரின் மாதிரிகள் கொங்கோவின் தலைநகரான கின்ஷாசாவில் உள்ள தேசிய உயிரியல் மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்திற்கு பரிசோதனைக்காக அனுப்பப்பட்டன.

அதில் எபோலா தொற்று இல்லை என உறுதியானது. சிலருக்கு மலேரியா பாதிப்பு இருப்பது தெரிய வந்துள்ளதைத் தொடர்ந்து ஆய்வுகள் நடந்து வருகின்றன. (நி-8)

# ராணுவ விமானம் விபத்து
## ம் மேற்பட்டோர் உயிரிழப்பு



ணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

இவ்விபத்து குறித்து ஒரு அறிக்கையில் விபத்தில் இராணுவ வீரர்கள் மற்றும் பொதுமக்கள் உயிரிழந்ததாக சூடான் இராணுவம், கூறியுள்ளது ஆனால், மேலதிக விபரத்தை வழங்கவில்லை. (நி-8)

# இந்தியாவை முந்தாவிட்டால் பெயரை மாற்றுகிறேன்
## என்கிறார் பாகிஸ்தான் பிரதமர்

(இஸ்லாமாபாத்)

"வளர்ச்சி திட்டங்களில் இந்தியாவை முந்தாவிட்டால், எனது பெயரை மாற்றிக் கொள்கிறேன்," என பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் பேசிய வீடியோ ஒன்று சமூக வலைத்தளங்களில் வைரலாகி உள்ளது.

பாகிஸ்தானின் தேரா காஜி கான் பகுதியில் வளர்ச்சித் திட்டங்களை ஆரம்பித்து வைத்து பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் பேசியதாவது: வளர்ச்சித் திட்டங்களில் இந்தியாவை முந்தாவிட்டால், எனது பெயர் ஷெபாஸ் ஷெரீப் அல்ல. இந்தியாவை முந்தி பாகிஸ்தானை சிறந்த நாடாக மாற்றுவோம்.

நான் நவாஸ் கானின் ஆதரவாளர். பதவியேற்ற



போது அவர் அளித்த ஆசி எனக்கு ஊக்கம் அளித்து வருகிறது. நாம் அனைவரும் இணைந்து பணியாற்றி பாகிஸ்தானை சிறந்த நாடாக மாற்றி இந்தியாவை தோற்கடிப்போம்.

இவ்வாறு ஷெபாஸ் ஷெரீப் பேசினார். இந்தப் பேச்சு சமூக வலைத்தளங்களில் வெளியானதும், அவரையும், பாகிஸ்தானையும் நெட்டிசன்கள் கிண்டல் செய்து வருகின்றனர். (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டை வந்தடைந்த ஒருதொகுதி வாகனங்கள்

(கொழும்பு)

ஐந்து வருடங்களின் பின்னர் தனிப்பட்ட பயன்பாட்டிற்காக இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்களின் ஒருதொகுதி கொழும்பு துறைமுகத்தை நேற்று முன்தினம் வந்தடைந்தது.

இறக்குமதி கட்டுப்பாடுகளை தளர்த்துவதற்கு அரசாங்கம் மேற்கொண்ட தீர்மானத்தையடுத்து வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

தனியார் இறக்குமதியாளர்களால் முன்பதிவு செய்யப்பட்ட 6 கெப் ரக வாகனங்கள் தாய்லாந்திலிருந்து கொழும்பிற்கு நேற்றுக்காலை கொண்டுவரப்பட்டன.

இன்னுமொரு தொகுதி நாட்டிற்கு கொண்டுவரப்படுமென வாகன இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அனைத்து வகையான வாகனங்களையும் எதிர்வரும் மார்ச் மாதத்திலிருந்து கொள்வனவு செய்ய முடியும் என வாகன இறக்குமதியாளர்களின் சங்கம் தெரிவித்துள்ளது. (நி-8)

# இலங்கையின் எரிபொருள் சந்தையில் நுழைந்தது அமெரிக்க நிறுவனம்



(கொழும்பு)

அமெரிக்காவுக்குச் சொந்தமான RM பார்க்ஸ், ஷெல் நிறுவனம் இலங்கையில் முதலாவது எரிபொருள் நிலையத்தை அம்பத்தலைப் பகுதியில் நேற்றுத் திறந்து வைத்தது.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தலைமையில் இந்த நிகழ்ச்சி நடைபெற்றது.

கலிபோர்னியாவைத் தளமாகக் கொண்ட இந்த நிறுவனம் இலங்கையில் எரிபொருள் நிலையத்தைத் திறந்துவைத்துள்ளமை பெருமையளிப்பதாக இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தமது எக்ஸ் தளத்தில் குறிப்பிட்டுள்ளார்.

எரிபொருள் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கு இந்த நிறுவனமும் பங்களிப்பு வழங்கும் என ஜூலி சங் தெரிவித்தார். (நி-8)



# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 150 | 200 | 200-250 | 200 |
| உருளைக்கிழங்கு | 180 | 180 | 150 | 200 |
| பச்சைமிளகாய் | 1600 | 1400 | 1100-1200 | 1600 |
| தக்காளி | 120 | 100 | 80-100 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 280 | 250-300 | 200 |
| கோவா | 300 | 250 | 250 | 400 |
| கரட் | 800 | 800 | 750 | 1000 |
| பூசணி | 140 | 150 | 80-100 | 200 |
| புடோல் | 150 | 200 | 180-200 | 300 |
| வாழைக்காய் | 200 | 100 | 80-120 | 200 |
| சின்ன வெங்காயம் | 250 | 300 | 150-300 | 300 |
| பெரிய வெங்காயம் | 180 | 180 | 150 | 200 |
| பாகற்காய் | 450 | 450 | 400-450 | 500 |
| வெண்டக்காய் | 350 | 400 | 300-400 | 400 |
| கருணைக் கிழங்கு | 200 | 200 | 150 | 200 |
| பயற்றங்காய் | 450 | 400 | 350-500 | 500 |
| லீக்ஸ் | 350 | 350 | 300 | 400 |
| பீற்றூட் | 250 | 200 | 150 | 300 |
| கறிமிளகாய் | 900 | 800 | 400-500 | 1000 |
| முருங்கைக்காய் | 2000 | 2500 | 1500 | 2000 |
| போஞ்சி | 150 | 250 | 150-200 | 300 |
| கத்தரிதம்புள்ள | 100 | 150 | -- | 160 |
| கீரை – 1 பிடி | 100 | 80 | 60-70 | 150 |
| தேசிக்காய் | 200 | 200 | 200-250 | 160 |
| தேங்காய் (ஒன்று) | 250 | 250 | 150-250 | 230-280 |
| இராசவள்ளி | 500 | 400 | 400 | 500 |
| வெங்காயப்பூ | 150 | 80 | 50-120 | 180 |
| முள்ளங்கி | 80 | 120 | 120 | 150 |
| பொன்னாங்காணி | 100 | 80 | 100 | 80 |
| வல்லாரை | 60 | 70 | 50 | 80 |
| ஈரப்பலா | 100 | 150 | 100 | 200 |

# இன்று ஒரு தகவல் 330

தென்கச்சி கோ.சுவாமிநாதன்



## செல்வம்

ஒரு பெரிய அரசன் இந்த உலகம் முழுவதையும் ஆண்டுகொண்டிருந்தான். நீண்ட காலம் அரசாட்சி செய்துகொண்டிருந்தான்.

திடீரென்று அவனுக்குச் சில எதிரிகள் முளைத்தார்கள். அவர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து இவரைத் தோற்கடித்தார்கள். தோற்றுப் போனதும் இவருக்குப் பயம் வந்துவிட்டது. எங்கே எதிரிகள் தன்னைக் கொன்று விடுவார்களோ என்று. வெளியில் வந்தால் தனக்கு ஆபத்து என்று பயந்துகொண்டு யாருக்கும் தெரியாமல் ஒரு குகைக்குள் போய் பதுங்கி இருந்தார்.

நிலைமையைப் பாருங்கள். முதல் நாள் அரண்மனையிலே அதிகாரம் செய்துகொண்டிருந்தவர் மறுநாள் குகையில் பயந்து போய் பதுங்கி இருக்கிறார். இரவாகியது. பசி வயிற்றைக் கிள்ளியது. பிச்சை எடுத்துச் சாப்பிட வேண்டிய நிலை. பிச்சை எடுப்பதற்குப் பாத்திரம் வேண்டுமே. என்ன செய்வது என்று அங்கேயும் இங்கேயும் பார்க்கிறார்.

ஒரு மூலையிலே யாரோ விட்டுச் சென்ற ஒரு உடைந்த ஓடு இருந்தது. அதை எடுத்துக்கொண்டு புறப்பட்டார். இருட்டிலே வழி தெரியவில்லை. ஏதோ ஒரு யூகத்திலே காலை மெதுவாக எடுத்து வைத்து நடந்து போய்க்கொண்டிருந்தார்.

வழியில் ஒரு கறுப்பு நாய் படுத்திருந்தது. இருட்டில் அது இவருடைய கண்ணுக்குச் சரியாகத் தெரியவில்லை. அதன்மேல் காலை வைத்துவிட்டார். நாய் சும்மா இருக்குமா? வள் என்று கடித்துவிட்டது. காலைப் பார்க்கிறான். காலத்தையும் நினைத்துப் பார்க்கிறான்.

அரண்மனையிலே வீரக்கழல் அணிந்த காலை உடையவரே மன்னா என்று புகழ்வார்களே புலவர்களெல்லாம். ஆனால் இன்று நாய் கடித்த காலாக மாறிவிட்டதே என்று நினைத்தார்.

அது மட்டுமா? முன்னர் எல்லாம் பொற்கிண்ணத்திலே தான் சாப்பிடுவார். ஆனால் இப்போது உடைந்து போன ஓட்டை கையிலே வைத்துக் கொண்டு நிற்கின்றார்.

நிறையப் பேர் அரண்மனைக்கு வருவார்கள். அரசருக்குக் காணிக்கை என்று சொல்லி இவருடைய காலடியில் கொண்டு வந்து கொட்டுவார்கள். அப்போது அவர்களுடைய முகத்தைக்கூட இவர் திரும்பிப் பார்ப்பதில்லை. மிகவும் கர்வமாக அமர்ந்திருப்பார்.

அப்படிப்பட்டவர் இன்று எல்லோருடைய கண்களிலும் தெரியும் அளவுக்குப் பிச்சை எடுத்துக்கொண்டிருந்தார். அப்போதெல்லாம் காணிக்கையைத் தன் கையாலே வாங்குவது கௌரவக் குறைச்சல் என்று நினைத்து தன்னுடைய சேவகர்களை விட்டுத்தான் அதை வாங்கச் சொல்லுவார்.

இப்போது அவரே தன் கையாலேயே பிச்சை வாங்குகிறார். நினைத்துப் பாருங்கள். அவர் முதல் நாள் அரசன் மறுநாள் பிச்சைக்காரன். எவ்வளவு வித்தியாசம். செல்வம் தான் இப்படி ஒரு வித்தியாசம் ஏற்படுவதற்குக் கார ணம். அப்படிப்பட்ட செல்வம் வாழ்க்கையை நடத்துவதற்கு நமக்குத் தேவை தான்.

ஆனால் அதையே நாங்கள் அடைய வேண்டிய பயனாக நினைக்கின்றோம். அதுதான் வேடிக்கை. இதனை ஆழ்வார் அழகாக ஒரு பாசுரத்தில் சொல்கிறார்.

ஒரு நாயகமாய் ஓடவுலகுடன் ஆண்டவர்
கருநாய் கவர்ந்த காலர் சிதைகிய பானையர்
பெருநாடு காண இம்மையிலே பிச்சைதாம் கொள்வர்
திருநாரணன்தாள் காலம்பெறச் சிந்தித்து உய்மினோ!
என்கிறார்.

ஒரு பெரிய பணக்காரர் ஒரு துறவியிடம் போய் சாமி என்னிடம் நிறையப் பணம் இருக்கிறது. இருந்தாலும் நிம்மதியாக இருக்க முடியவில்லை, என்ன காரணம் என்று கேட்டார்.

உடனே அந்தத் துறவி இதற்கு நேரடியாகப் பதில் சொல்லாமல் பக்கத்தில் இருந்த ஒரு குழந்தையைக் கூப்பிட்டார். அந்தக் குழந்தை ஓடி வந்தது.

ஒரு அப்பிள் பழத்தை எடுத்துக் கொடுத்தார் துறவி. அதை வாங்கிக் கொண்டு சிரித்தது. இன்னொரு கையிலே பழத்தை கொடுத்தார். அதை இன்னொரு கையிலே வாங்கிக் கொண்டு சிரித்தது. மூன்றாவது அப்பிளைக் கொடுத்தார். இரண்டு பழத்தையும் நெஞ்சிலே அணைத்துக்கொண்டு மூன்றாவது பழத்தையும் வாங்க முயற்சி செய்தது. ஆனால் அது நழுவி கீழே விழுந்து உருண்டு ஓடி விட்டது. ஏற்கனவே இருந்ததும் விழுந்து விட்டது. இப்போது அந்தக் குழந்தை அழ ஆரம்பித்துவிட்டது. அப்போது அந்தத் துறவி பணக்காரனிடம் சொன்னார்.

குழந்தையை கவனித்தீர்களா? இரண்டு அப்பிள் போதும் என்று நினைத்திருந்தால் இப்போது அழ வேண்டிய அவசியம் வந்திருக்குமா? என்றார். எதுவும் அளவுக்கு மிஞ்சினால் துன்பம் தான். இந்தக் காலத்திலே இதையெல்லாம் யார் காதில் வாங்குகிறார்கள்?

ஒருத்தரை நல்லவழிக்குக் கொண்டு வரவேண்டும் என்று நினைத்து அவனைக் கூப்பிட்டு உட்கார வைத்து இந்தக் கதையைச் சொன்னேன். சொல்லிவிட்டு அந்தக் குழந்தை செய்தது தப்புத் தானே என்றேன்.

ஆமாம் தப்புத்தான். நானாக இருந்தால் அப்படிச் செய்திருக்க மாட்டேன் என்றார். இரண்டு பழத்தோடு காணும் என்று சொல்லியிருப்பியா என்று கேட்டேன்.

அப்படி இல்லை அவர் கொடுக்கக் கொடுக்க வாங்கி பின்னால் வைத்துவிட்டு மறுபடியும் கையை நீட்டுவேன் என்றார். இவன் எல்லாம் எந்தக் காலத்தில் திருந்துவது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துடுப்பாட்ட சமர் ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கின் போர் என அழைக்கப்படும் 118 ஆவது துடுப்பாட்டப் போட்டி சீரற்ற காலநிலை காரணமாக பிற்போடப்பட்டுள்ளது.

யாழ். மத்திய கல்லூரிக்கும் சென்.ஜோன்ஸ் கல்லூரிக்கும் இடையிலான குறித்த துடுப்பாட்டப் போட்டி இன்று இடம்பெற இருந்த நிலையில் இவ்வாறு பிற்போடப்பட்டுள்ளது.

இந் நிலையில் இவ் இரு கல்லூரிகளுக்கும் இடையிலான 118 ஆவது வடக்கின் பெரும்போர் மார்ச் மாதம் 6,7.8 ஆம் திகதிகளில் யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (6-8)

(யாழ்ப்பாணம்)

"பொன் அணிகளின்" போர் என வர்ணிக்கப்படும் சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்குமிடையிலான கிரிக்கெட் தொடர் இன்று ஆரம்பமாக விருந்த நிலையில் சீரற்ற காலநிலை காரணமாக பிற்போடப்பட்டுள்ளது என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (6-8)

## ஆனையிறவு கடற்கரையில் தூய்மைப்படுத்தல் பணி முன்னெடுப்பு

(கிளிநொச்சி)

தூய்மையான இலங்கை (கிளீன் சிறிலங்கா) வேலைத் திட்டத்தின் கீழ் கடற்கரை பிரதேசங்களைச் சுத்தம் செய்யும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கண்டாவளை பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட ஆனையிறவு கடற்கரை பகுதியை சுத்தம் செய்யும் நிகழ்வானது கடந்த ஞாயிற்றுக் கிழமை கண்டாவளை பிரதேச செயலாளர் ரி.பிருந்தக்காரன் தலைமையில் நடைபெற்றது.

"சுத்தமான கடற்கரை கவர்ந்திழுக்கும் சுற்றுலாத்தளம்" எனும் தொனிப்பொருளில் பிரதேச மட்டத்தில் உள்ள கடற்கரைகளை தூய்மைப்படுத்துவதற்கும் தொடர்ச்சியாக சுத்தமாகப் பேணுவதற்கும் இந்த வேலைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது அரச திணைக்களங்களின் உத்தியோகத்தர்கள் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், பொலிஸ் முப்படையினர் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டு தூய்மைப்படுத்தும் பணியினை முன்னெடுத்தனர்.இதன்போது அதிகளவான பிளாஸ்டிக் கழிவுப் பொருட்கள் கண்ணாடியிலான கழிவுப் பொருட்கள் இலகுவில் அழிந்து போகக்கூடிய கழிவுப் பொருட்கள் என ஏராளமான கழிவுகள் உரிய முறையில் அகற்றப்பட்டு இருந்தது.

மேலும் இதனுடன் இணைந்ததாக கிளிநொச்சி மாவட்டத்தின் ஏனைய 11 இடங்களிலும் சமநேரத்தில் கடற்கரைப் பிரதேசங்களைச் சுத்தம் செய்யும் நிகழ்ச்சித் திட்டம் செயற்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (6-8)

## கால்நடைகளின் உறைவிடமான ஆயுர்வேத வைத்தியசாலை

### பொது அமைப்புக்கள் விசனம்

(தருமபுரம்)

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி பிரதேச சபையினரால் கண்டாவளைப் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட தருமபுரம் பகுதியில் பல மில்லியன் ரூபாய் செலவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட ஆயுர்வேத வைத்தியசாலை ஏழு வருடம் கடந்த நிலையில் மக்கள் பாவனைக்கு கையளிக்கப்படாது கால்நடைகளின் உறைவிடமாக காட்சியளிப்பதாக பொது அமைப்புக்கள் விசனம் தெரிவித்துள்ளன.

இவ் வைத்தியசாலையானது கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட 16 கிராம மக்கள் பயன் தரக்கூடிய வகையில் நவீன ஆயுர்வேத வைத்தியசாலை என புதிதாக நிர்மாணிக்கப்பட்டு இருந்த போதிலும் இன்று வரை மக்கள் பாவனைக்கு கையளிக்கப்படாத நிலையில் காணப்படுகின்றது.

தற்பொழுது புதுக்குடியிருப்பு பரந்தன் ஆகிய பகுதிகளுக்கே அதிகளவான பணம் செலவழித்து அப்பகுதியில் உள்ள ஆயுர்வேத வைத்தியசாலைகளுக்கு நோயாளிகள் சென்று வருகின்றனர்.

எமது பகுதியில் ஆயுர்வேத வைத்தியசாலையை வைத்துக்கொண்டு வேறு பகுதிக்கு செல்ல வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் மக்களின் நலனை கருத்தில் கொண்டு சம்பந்தப்பட்ட உரிய அதிகாரிகள் எமது ஆயுர்வேத வைத்தியசாலையை எமது பயன்பாட்டுக்கு விரைவாக வழங்க வேண்டும் என பொது அமைப்புக்கள் வலியுறுத்தி உள்ளனர். (6-8-316)

## தண்ணிமுறிப்பு குளத்தின் கீழ் 1938 ஏக்கரில் சிறுபோகம்



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டம் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட தண்ணிமுறிப்பு குளத்தின் கீழான சிறுபோகச் செய்கை தொடர்பிலான கலந்துரையாடல் நேற்று முன்தினம் மாவட்ட அரசாங்க அதிபர் உமா மகேஸ்வரன் தலைமையில் குமுழமுனை கமநல சேவை நிலையத்தில் நடைபெற்றது.

இம்முறை தண்ணிமுறிப்பு குளத்தின் கீழுள்ள 12 கண்டங்களை உள்ளடக்கிய 1938 ஏக்கர் வயல் நிலம் சிறுபோக செய்கை மேற்கொள்ள முடியுமென தீர்மானிக்கப்பட்டது.

மேலும் தண்ணிமுறிப்பு குளத்தின் கீழான வீதிகள், அணைக்கட்டுகள்,மேய்ச்சல் தரைகள் தொடர்பான பல பிரச்சினைகளை விவசாயிகள் மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் துறைசார்ந்த அதிகாரிகளுக்கு எடுத்துக்கூறினர்.

இந்தக் கலந்துரையாடலில் மேலதிக மாவட்ட அரசாங்க அதிபர் எஸ்.குணபாலன், மாவட்ட பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர், பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர், பிரதம நீர்ப்பாசனப் பொறியியலாளர், நன்னீர் மீன்பிடி பணிப்பாளர், கமநல காப்புறுதி சபையினர், கால்நடை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை உத்தியோகத்தர், கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர், கமக்கார அமைப்பினர், விவசாயிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

நாளை மறுதினம் சிறுபோக செய்கைக்காக தண்ணிமுறிப்பு குளத்து நீர் திறக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-8)

## 3 டிப்பர் வாகனங்களை மடக்கிப் பிடித்த பொலிஸார்

### மூவர் கைது



(சாவகச்சேரி)

உரிய அனுமதிப்பத்திரங்கள் இன்றி மணல் ஏற்றிச் சென்ற மூன்று டிப்பர் வாகனங்களை கடந்த திங்கட்கிழமை இரவு சாவகச்சேரிப் பொலிஸார் மடக்கிப் பிடித்துள்ளனர்.

இதன்போது மூன்று சந்தேக நபர்களை கைது செய்த பொலிஸார் மணல் ஏற்றிச் சென்ற டிப்பர் வாகனங்கள் மூன்றினையும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்துள்ளனர்.

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வெவ்வேறு இடங்களில் ஏ9 வீதியில் மேற்படி கைது நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (6-8-30)



மு/விசுவநாதர் ஆரம்பப் பாடசாலையில் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நேற்று முன்தினம் பாடசாலை மைதானத்தில் அதிபர் யோகராசா தலைமையில் இடம்பெற்றது. இதன்போது வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன. (படம்- தேவானந்தன்)





நாயன்மார்களால் தேவாரப்பதிகம் பாடல் பெற்ற தலங்களில் ஒன்றான மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்தில் நேற்று சிவராத்திரி நிகழ்வு பக்திபூர்வமாக இடம்பெற்றது. மன்னார் பாலாவியில் நீராடி பாலாவி தீர்த்த நீரை திருக்கேதீஸ்வர ஆலயத்தினுள் உள்ள மகா சிவலிங்கத்திற்கு நீர்வார்த்து நெய் விளக்கு ஏற்றி மற்றும் நேர்த்திக்கடன்களில் அடியவர்கள் ஈடுபட்டு இருந்தனர்.

## ஏலவிற்பனை

(யாழ்ப்பாணம்)

யாழ்.நீதிவான் நீதிமன்ற வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்டதும் உரிமை கோரப்படாததுமான மோட்டார் சைக்கிள்கள் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். நீதிவான் நீதிமன்ற வளாகத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது என யாழ். நீதிவான் நீதிமன்றத்தின் பதிவாளர் அறிவித்துள்ளார். (6-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 712





## 43 ஆம் அத்தியாயம்
## நந்தி மண்டபம்

மறுநாள் பிற்பகல் மீண்டும் பெரிய பிக்கு பொன்னியின் செல்வனைப் பார்ப்பதற்கு வந்தார். அவரிடம் பல கேள்விகள் கேட்பதற்கு இளவரசன் துடித்துக் கொண்டிருந்தான். சின்ன பிக்குவிடம் அவன் கேள்வி கேட்டு விவரம் அறிந்து கொள்ளச் செய்த முயற்சிகள் பலிக்கவில்லை. "ஐயா! எல்லாம் குருதேவர் தெரிவிப்பார்" என்று ஒரே வித மறுமொழிதான் திரும்பத் திரும்ப வந்தது.

குருதேவர் வந்ததும், "இளவரசே! இப்போது உடம்பு எப்படி இருக்கிறது?" என்று கேட்டார்.

"ஐயா உடம்பு என்னை மிகவும் தொந்தரவு படுத்துகிறது. 'எதற்காக சோம்பிப் படுத்திருக்கிறாய்? எழுந்து ஓடு! குதிரை மேல் ஏறு! நதியில் குதித்து நீந்து! யானையுடன் சண்டைபோடு! வெறுமனே படுத்திராதே!' என்கிறது. வயிறும் வெகு சுறுசுறுப்பாயிருக்கிறது. சின்ன பிக்கு கொண்டு வந்து கொடுத்த உணவெல்லாம் போதவில்லை. ஆச்சாரியரே! இத்தனை நாள் நான் கடும் சுரம் நீடித்து நினைவு தவறியிருந்தேன் என்பதையே நம்ப முடியவில்லை. தங்களுடைய மருந்து அவ்வளவு அற்புதமான வேலை செய்திருக்கிறது!" என்று சொன்னான் பொன்னியின் செல்வன்.

"ஐயா! உடம்பின் பேச்சை ரொம்பவும் நம்பிவிடக் கூடாது. சுரம் தெளிந்ததும் அப்படித்தான் இருக்கும் கொஞ்சம் அசட்டையாயிருந்தது, இரண்டாம் தடவை சுரம் வந்துவிட்டால் உயிருக்கே ஆபத்தாகப் போய்விடும்!"

"குருதேவரே! என்னுடைய உயிருக்கு வரக்கூடிய ஆபத்தைப் பற்றி நான் அவ்வளவாகப் பயப்படவில்லை."

"தாங்கள் கவலைப்படவில்லை. சரிதான்! ஆனால் இந்தச் சோழ நாட்டில் உள்ள கோடி மக்கள் சென்ற நாலைந்து தினங்களாக எவ்வளவு கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள், தெரியுமா? நாடு நகரங்களெல்லாம் அல்லோலகல்லோலப் படுகின்றன. சின்னஞ்சிறு குழந்தைகள் முதல் வயோதிபர்கள் வரையில் கண்ணீர் விடுகிறார்கள்."

"ஐயா! தாங்கள் சொல்லுவது ஒன்றும் எனக்கு விளங்கவில்லை. ஜனங்கள் எதற்காக அவ்வளவு வருத்தப்பட வேண்டும்? ஒருவேளை நான் இந்தச் சுரம் குணமாகிப் பிழைக்க மாட்டேன் என்ற எண்ணத்தினாலா? சூடாமணி விஹாரத்தில் தாங்கள் எனக்குச் சிகிச்சை செய்து வருகிறீர்கள் என்று தெரிந்திருக்கும் போது ஜனங்கள் ஏன் கவலைப்பட வேண்டும்?"

"இளவரசே! தங்களுக்குச் சுரம் என்பதும், தாங்கள் சூடாமணி விஹாரத்தில் இருந்து வருவதும் ஜனங்களுக்குத் தெரியாது. இந்த நகரத்தின் மாந்தர்களுக்கு அது தெரிந்திருந்தால், இந்த விஹாரத்தில் இவ்வளவு அமைதி குடி கொண்டிருக்குமா? மதில் சுவர்களையெல்லாம் இடித்துத் தகர்த்துக்கொண்டு அத்தனை ஜனங்களும் தங்களைப் பார்க்க இங்கு வந்திருக்க மாட்டார்களா?


இவ்வாறு ஆவேசம் கொண்டவன்போல் பேசி வந்த இளவரசன் உடலில் போதிய பலமில்லாமையால் கட்டிலில் சாய்ந்தான். உடனே ஆச்சாரிய பிக்கு அவனுடைய தோள்களைப் பிடித்துக் கொண்டு, கட்டிலில் தலை அடிபடாமல் மெல்ல மெல்ல அவனைப் படுக்க வைத்தார். நெற்றியில் கையினால் தடவிக் கொடுத்து, "இளவரசே! தாங்கள் உத்தேசித்த அரும்பெரும் காரியங்களையெல்லாம் காலாகாலத்தில் செய்து முடிப்பீர்கள். முதலில், உடம்பு பூரணமாய்க் குணமடைய வேண்டும். சற்று அமைதியாயிருங்கள்!" என்றார்.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## மணல் எழுத்து



புனித யாத்திரை ஒன்றிற்காக கோபன் சோபன் என்ற இரண்டு நண்பர்கள் பாலைவனத்தில் ஒன்றாகப் பயணம் செய்து கொண்டிருந்தார்கள். கோபன் பெரிய பணக்காரன் சோபன் மிகவும் ஏழை. இருவரும் ஒன்றாக ஒரே பள்ளியில் படித்தவர்கள். கோபனிற்கு எப்போதுமே பணக்காரத் திமிர் அதிகம். சோபனோ தனது ஏழ்மையிலும் மிகுந்த அன்பும் நட்புமாக இருப்பான்.

கோபன் எப்போதுமே சோபனை மட்டம் தட்டிக் கொண்டேயிருப்பான். ஆனாலும் சோபன் தன் நண்பனை விட்டுக் கொடுக்கவே மாட்டான். குறை சொல்லவே மாட்டான். ஆகவே இருவரும் ஒன்றாகப் பாலைவனத்தில் பயணம் செய்ய ஆரம்பித்தார்கள்.

வெயிலும் எல்லையற்றுப் பரந்த மணலும் அவர்கள் பயணத்தை கடுமையாக்கியது.

கையில் வைத்திருந்த தண்ணீரையும் உணவையும் பகிர்ந்து சாப்பிட்டபடியே அவர்கள் பாலைவனத்தைக் கடந்து கொண்டிருந்தார்கள்.

கோபன் தனது உணவை ஏன் சோபனோடு பகிர்ந்து சாப்பிட வேண்டும் என்று எரிச்சல் கொண்டான். அதனால் நண்பனை ஏமாற்றி பாதி உணவைத் தானே சாப்பிடத் தொடங்கினான். இது போல தண்ணீரையும் அவன் ஒருவனே குடித்து வந்தான்.

தன்னைக் கோபன் ஏமாற்றுகிறான் என்று தெரிய வந்த போதும் சோபன் கோபம் கொள்ளவேயில்லை. பாலைவனத்தில் ஒரு இடத்தில் ஈச்சைமரமிருந்தது. அதில் உதிர்ந்த பழங்க்ளை எல்லாம் சோபன் ஓடிப் போய் பொறுக்கி சேகரித்தான். கோபன் அதையும் தட்டிப் பறித்துக் கொண்டு அவை யாவும் தனக்கே சொந்தமானவை என்றான்.

அதற்கு சோபன் உன்னிடம் தான் தேவையான உணவு இருக்கிறதே பிறகு ஏன் இதை வேறு பறிக்கிறாய், எனக்கு பசியாக இருக்கிறது. ஈச்சம் பழங்களைத் தந்துவிடு என்று கேட்டான்.

அதைக் கேட்டு கோபப்பட்ட கோபன் அப்படியானால் நான் உன்னை ஏமாற்றுகிறேன் என்று குற்றம் சொல்கிறாயா என்று சண்டையிட்டு சோபன் முகத்தில் ஓங்கி ஒரு அடி அடித்தான். சோபனின் மூக்கு உடைபட்டு இரத்தம் வழிந்தது.

அந்த நிமிடமே இருவரும் பிரிந்து தனித் தனியே நடக்கத் தொடங்கினார்கள்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையான அமைதியும், அன்புமே மனதை பராமரிப்பதற்கான ஆதாரமாகும். - அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## நோயை மாற்றாவிட்டால் நிலைமை இன்னும் கடினமாகும்

நோய் நாடி நோய் முதல் நாடி அது தணிக்கும் வாய் நாடி வாய்ப்பசெயல் என்றான் வள்ளுவன்.

மருந்து என்ற அதிகாரத்தில் வள்ளுவன் கூறிய மேற்படி குறள் நோய்க்கானதாயினும் அந்தக் குறள் எங்கெங்கு என்னென்ன சிக்கல்கள் உளதோ அவை அனைத்துக்கும் அஃது பொருத்தமாகும்.

அந்த வகையில் இலங்கைத் திருநாட்டின் அவலத்துக்கும் அதன் வீழ்ச்சிக்கும் மூலகாரணம் இனப்பிரச்சினை என்பது வெளிப்படையானது. இருந்தும் அந்த உண்மையை இன்னும் தென்பகுதி சரியாக உணரவில்லை.

இங்குதான் நோய் நாடி நோய் முதல் நாடி... என்ற குறளின் பொருள் உணரப்பட வேண்டியதாக உள்ளது. ஆம், முதலில் நோய் என்ன என்பதை கண்டறிய வேண்டும்.

பின்னர் நோய்க்கான காரணத்தை அறிவது அவசியமாகிறது. அடுத்து அந்த நோயைக் குணப்படுத்தவல்ல மருந்து எது என்பதைத் தெளிந்து கொள்ள வேண்டும்.

எனினும் நம் நாட்டில் நோய் என்பது இன்னமும் கண்டறியப்படவில்லை.

நிலைமை இதுவாக இருக்கும்போது, அந்த நோய் ஏற்படக் காரணம் என்ன என்பதும் அதற்கான தீர்வு என்ன என்பதும் பற்றி ஆராய்வதற்கான சந்தர்ப்பம் இல்லாமல் போகிறது.

இதை இன்னும் சுருக்கமாகக் கூறினால், நோயைக் கண்டறியாமல் இருக்கும்போது, நோய் முற்றி அது தனது தாக்கத்தைக் காட்டத் தலைப்பட்டுவிடும்.

உண்மை. இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதை விடுத்து தமிழ் மக்களுக்கு எதிராகப் போர் தொடுத்து, தமிழ் மக்களைக் கொன்று குவித்து பேரினவாதம் இழைத்த அட்டூழியம் இன்று இலங்கையை கந்தறு நிலைக்கு ஆளாக்கியுள்ளது.

இதற்கும் மேலாக, இலங்கையின் பொருளாதாரம் போராயுதங்களாக வெடித்துச் சிதறின. கூடவே அனைத்து மட்டத்திலும் ஊழல் கலாசாரம் உச்சம் பெற்றது. இருந்தும் இன்னமும் நாடு திருந்தவில்லை.

ஆக, இத்தகு நிலைக்கு மூலகாரணம் இனப்பிரச்சினை என்பதை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் உணர்ந்து கொள்ளும் என நம்பலாம்.

ஏனெனில் இந்த நாட்டு மக்கள் அரசியலில் மாற்றத்தை ஏற்படுத்த முற்பட்டதற்குள், ஏலவே இந்த நாட்டை மாறி மாறி ஆட்சி செய்தவர்கள் இனவாதம் பேசி நாட்டைக்குட்டிச் சுவராக்கியவர்கள். எனவே இனியும் அவர்களை ஆட்சிப்பீடமேற்றினால், இந்த நாடு தாங்காது என்ற அடிப்படையிலேயே அநுர குமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கத்தை மக்கள் அரியணை ஏற்றினர்.

எனினும் அநுரவின் அரசாங்கமும் இனப்பிரச்சினை என்பதை கடந்து செல்ல முடியும் என நினைத்தால், நாடு இன்னும் அதலபாதாளத்தில் வீழ்வதாகவே இருக்கும்.

ஆகையால், இந்த நாட்டில் நடந்த எந்தப் போர்க்குற்றங்களையும் தட்டிவிடலாம் என அநுர அரசு நினைக்காமல், அதற்கெல்லாம் உரிய நீதியை வழங்கி தமிழ் மக்களின் கண்ணீருக்குப் பதில் கூற வேண்டும்.

அப்போதுதான் இனப்பிரச்சினைக்கான தீர்வு சாத்தியமாகும்.

### உங்களால் முடியாவிட்டால்

## பாதுகாப்புச் செயலர் பதவியை கோட்டாவிடம் ஒப்படையுங்கள்

### சட்டத்தரணி மனோஜ் கமகே காட்டம்

(கொழும்பு)

நாட்டின்பாதுகாப்புச்செயலாளர் பதவியை முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு வழங்க வேண்டும் என்று சட்டத்தரணி மனோஜ் கமகே தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஊடக சந்திப்பில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

கோட்டாபய ராஜபக்ஷ ஒரு திறமையான மற்றும் அனுபவமிக்க நபர். அவர் நாட்டின் தேசிய பாதுகாப்பை உறுதி செய்திருந்தார். எனவே அவருக்கு அந்தப் பதவி வழங்கப்பட வேண்டும் என்றும் சட்டத்தரணி மனோஜ் கமகே கேட்டுக் கொண்டார்.

மேலும் கருத்துத் தெரிவித்த அவர்,

முன்னாள் ஜனாதிபதிகள் மகிந்த ராஜபக்ஷ மற்றும் கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோரின் உயிருக்கு அச்சுறுத்தல் உள்ளது. ஏனெனில் அவர்கள் கடந்த காலத்தில் நாட்டின் ஒவ்வொரு பிரச்சினையிலும் நேரடியாகத் தீர்மானங்களை எடுத்த தலைவர்கள்.

ராஜபக்ஷ குடும்பம் இன்னும் இந்த நாட்டை ஆள்கிறது என்று அமைச்சர்கள் கூறுகிறார்கள். அப்படியானால் அந்த நாற்காலிகளில் நீங்கள் இருக்க வேண்டிய அவசியமில்லை. உடனடியாக அந்த நாற்காலிகளில் இருந்து இறங்குங்கள்.

நாட்டின் பாதுகாப்பு அமைச்சை கோட்டாபய ராஜபக்ஷவிடம் ஒப்படைத்து விடுங்கள். ஒரு மாதத்திற்கு அதை ஒப்படைத்துப் பாருங்கள். அவர் இந்தப் பிரச்சினைகளையெல்லாம் தீர்த்து வைப்பார். ஏனென்றால் அவர் பாதுகாப்புச் செயலராக இருந்து இந்த நாட்டின் தேசியப் பாதுகாப்பைத் திறமையாக உறுதி செய்த ஒரு தலைவர். உங்களால் முடியாவிட்டால் புலம்பாதீர்கள், கோட்டாபய ராஜபக்ஷவிடம் பதவியை ஒப்படைத்து விடுங்கள் எனத் தெரிவித்தார். (ந-7)

### அரசியல் பழிவாங்கலை விடுத்து

## குற்றவாளிகளை கண்டுபிடியுங்கள்

### நாமல் எம்.பி தெரிவிப்பு

(கொழும்பு)

அரசியல் பழிவாங்கல் நோக்கில் அரசாங்கம் நாட்டில் இடம்பெற்ற ஊழல்களுக்கு ராஜபக்ஷக்களைக் காரணம் காட்டுவதனால் உண்மையான குற்றவாளிகள் தப்பி வருகிறார்கள் எனத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ; அரசாங்கம் உண்மையான குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க வேண்டும் என்றார்.

எயார் பஸ் கொடுக்கல் வாங்கல் தொடர்பில் குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் ஊடகங்களுக்கு மேலும் கருத்து தெரிவிக்கையில்,

எயார் பஸ் கொடுக்கல் வாங்கல் தொடர்பில் விசாரிப்பதற்கு வருகை தருமாறு கூறியிருந்தார்கள். அதனால் நான் நேற்று (இன்று) வந்தேன். அவர்கள் கூறிய நேரத்திற்கே வந்து விட்டேன். நேற்று ஒரு விடுமுறைநாள். விடுமுறைநாளிலும் வருகை தந்து விசாரணை நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குகின்றோம்.

வழமையைப் போல 100 மில்லியன் ரூபாயை மேசைமீது வைத்து விட்டுச் சென்றுள்ளதாக இன்னும் ஒருவர் கூறியுள்ளார். கடந்த முறை 200 மில்லியன் ரூபாய். இம்முறை நூறாகக் குறைந்துள்ளது. அடுத்தடுத்த முறைப்பாட்டில் 50, 25 எனக் குறைந்து செல்லும்.

அரசாங்கம் எங்களைப் பற்றி விசாரிக்க சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை, சமய விடுமுறை தினங்கள் எனப் பாராது விடுமுறை நாட்களிலும் விசாரணைகளை மேற்கொள்வது போல நாட்டு மக்களுக்கு நாளாந்தம் உள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்குங்கள்.

பாதீட்டில் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுங்கள். தேர்தல் காலங்களில் வழங்கிய வாக்குறுதிகளை மறந்து விட்டார்கள். பாதீட்டில் வழங்கியவற்றையாவது நிறைவேற்ற அயராது உழைத்தால் நல்லது என நான் எண்ணுகின்றேன்.

இப்போது யார் வேண்டுமானாலும் எல்லா கள்ள வேலைகளையும் செய்து விட்டு ராஜபக்ஷகள் மீது சுமத்தி விட முடியும். இப்போது அது எல்லாருக்கும் மிக இலகுவான விடயமாகிப் போய்விட்டது.

அதனால் அவர்கள் நிரபராதிகள் என விடுதலையாவார்கள். அரசாங்கமும் இதனை வழக்கமாக்கிவிட்டால், நாட்டில் நடக்கும் எல்லாக் குற்றச்செயல்களையும் எங்கள் மீது சுமத்திவிட்டு உண்மையான குற்றவாளிகள் ஒழிந்து கொள்வார்கள்.

இந்த அரசியல் பழிவாங்கல்களைக் கைவிட்டு விடுங்கள் என நான் அரசாங்கத்திடம் கேட்டுக் கொள்கின்றேன். உண்மையான குற்றவாளிகளைக் கண்டுபிடியுங்கள் என்று கூறினார். (ந-7)

### மினுவாங்கொடையில்

## துப்பாக்கிச் சூடு ஒருவர் காயம்

(பத்தண்டுவன)

மினுவாங்கொடை, பத்தண்டுவனப் பகுதியில் நேற்றுக் காலை 11 மணியளவில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் நபரொருவர் காயமடைந்துள்ளார்.

36 வயதுடைய, கொட்டகம முதியான்சலாகே லஹிரு ரந்தீர் காஞ்சன என்ற முச்சக்கர வண்டி ஓட்டுநர் ஒருவரே இச்சம்பவத்தில் காயமடைந்துள்ளார்.

உந்துருளியில் வந்த இருவரால் இந்தத் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளதாக ஆரம்பக் கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

காயமடைந்த நபர் சிகிச்சைக்காக மினுவாங்கொடை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக கம்பஹா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்களைக் கைது செய்ய மினுவாங்கொடைப் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ந-7)

## ரணிலால் மட்டுமே நாட்டை மீட்க முடியும்

### ராஜித தெரிவிப்பு

அரசாங்கத்திற்கு எதிரான பொதுமக்களின் எதிர்ப்பு தொடர்ந்து அதிகரித்து வருவதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து ஊடகங்களுக்கு மேலும் கருத்து வெளியிட்ட அவர், புதிய அரசாங்கத்திற்கு வாக்களித்த மக்கள் நடந்த சம்பவங்களால் வருத்தமடைந்துள்ளனர் எனவும் சுட்டிக்காட்டினார்.

முன்னாள் ஜனர்திபதி கோட்டாபய ராஜபக்ஷவும் தற்போதைய ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவும் தோல்வியடைந்து விட்டனர்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் மட்டுமே நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப முடியும் என்பதை மக்கள் அங்கீகரிப்பதாகவும் ராஜித சேனாரத்ன மேலும் தெரிவித்தார். (ந-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடுகளுக்கான உதவியை நிறுத்தியது அமெரிக்கா!

## இலங்கையின் பல முக்கிய திட்டங்கள் பாதிப்பு



**(ஜெனீவா)**

**வெளிநாடுகளுக்கான உதவியை அமெரிக்கா நிறுத்தியிருப்பது இலங்கையில் பல முக்கியமான திட்டங்களைப் பாதிக்கிறது என இலங்கைக்கான ஐக்கிய நாடுகள் சபையின் வதிவிட ஒருங்கிணைப்பாளர் மார்க் - ஆண்ட்ரே ஃபிரஞ்ச் தெரிவித்துள்ளார்.**

அவற்றில் உணவுப் பாதுகாப்பு, பொருளாதார சீர்திருத்தங்கள், ஜனநாயக நிர்வாகம், ஊழல் எதிர்ப்பு, எல்லைப் பாதுகாப்பு மற்றும் புலம்பெயர்வு முகாமைத்துவம் போன்ற திட்டங்களும் அடங்குவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்காவின் உதவி இலங்கையின் வருடாந்த பாதீட்டு திட்டத்தில் சுமார் 12 சதவீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துவதாகவும் இலங்கைக்கான ஐக்கிய நாடுகள் சபையின் வதிவிட ஒருங்கிணைப்பாளர் மார்க் - ஆண்ட்ரே ஃபிரஞ்ச் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் ஐக்கிய நாடுகள் சபையில் அமெரிக்காவின் நிதி மற்றும் ஈடுபாடு குறித்த பொதுவான மதிப்பாய்வை மேற்கொள்ள வேண்டுமென அறிவித்தார்.

இந்தநிலையில் அமெரிக்கா தமது முடிவை மீள் பரிசீலனை செய்யும் என எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.


இதேவேளை, யு.எஸ். எய்ட்டின் நிதி முடக்கல் காரணமாக இலங்கையின் அரச துறையும் கடுமையாகப் பாதிப்படைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

2019 ஆம் ஆண்டு முதல் இலங்கையில் சுமார் 160 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான திட்டங்களுக்கான ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளது.


அவற்றில் பெரும்பாலானவை முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஆட்சிக் காலத்தில் கைச்சாத்தானதாகத் தெரிவிக்கப்படுகிறது. (நி-8)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3302

**வசந்த்**




**யுவராஜ்**




**சுக்கிரன்**




**ஜயந்தி**




**றேணு**




**கருணி**




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காற்றில்...

கடைப்பிடிப்பதாகத் தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச் செயலாளரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமாகிய எம்.ஏ.சுமந்திரன் குற்றம் சாட்டினார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் குறித்த விடயத்தை வெளிப்படுத்தினார்.

அங்கு மேலும் கருத்து வெளியிட்ட அவர், தேசிய மக்கள் சக்தியினர் பயங்கரவாதத் தடைச் சட்டம் முற்றாக ஒழிக்கப்படும். மாற்றீடாக புதிய சட்டம் உருவாக்கப்படமாட்டாது என்று வாக்குறுதி அளித்ததனாலேயே தேர்தலில் வெற்றி பெற்றனர்.

அவ்வாறு இருக்க தற்போது தாம் வழங்கிய வாக்குறுதிகளுக்கு எதிராக தேசிய மக்கள் சக்தியினர் செயற்பட எத்தனிக்கின்றனர்.

இதன்மூலம் வாக்களித்த மக்கள் ஏமாற்றப்படுகின்றனர் எனவும் அவர் குற்றம் சாட்டினார். (ந-7)

## கட்டடத்திலிருந்து...

இடம்பெற்ற இச்சம்பவத்தில் உயிரிழந்தவர் வண்ணார்பண்ணை பத்திரகாளியம்மன் கோவிலடியைச் சேர்ந்த தனபாலசிங்கம் நிருஜன் (வயது-42) என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையாவார்.

பிரஸ்தாப நபர் மேற்தளத்தில் இருந்து வீழ்ந்ததுடன் அவரை யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றபோது அவர் ஏற்கெனவே உயிரிழந்துவிட்டமை உறுதிப்படுத்தப்பட்டது.

மரண விசாரணைகளை யாழ்போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேமகுமார் மேற்கொண்டார். (ந-7,60)

## கப்பல் சேவை...

வெளியிட்டுள்ள தமிழக கடல்சார் சபையின் பிரதம நிறைவேற்று அதிகாரி வள்ளலார்,

குறித்த கப்பல் சேவையானது 250 பயணிகள் பயணிக்கக்கூடிய வகையில் அமையப் பெறும் என்றும் பயண நேரம் சுமார் ஒரு மணிநேரமாக இருக்கும் என்றும் தெரிவித்துள்ளார்.

அதேவேளை இதற்காக இராமேஸ்வரத்தில் தற்காலிகப் பயணிகள் முனையம் ஒன்று அமைக்கப்பட்டு வருவதாகவும் அங்கு சுங்கப் பிரிவின் கிளையை நிறுவ மத்திய அரசிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ந-7)

## நாமல் எம்.பி...

வில் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் ஆஜராகியிருந்தார்.

இதன்போது, நாமல் ராஜபக்ஷ விடமிருந்து 5 மணிநேர வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது. வாக்குமூலம் வழங்கிய பின்னர் நாமல் ராஜபக்ஷ குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் இருந்து வெளியேறியுள்ளார். (ந-7)

## மக்களின்...

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 58ஆவது கூட்டத்தொடர் கடந்த திங்கட்கிழமை (24) ஜெனிவாவில் ஆரம்பமாகிய நிலையில் நேற்று இக்கூட்டத்தொடரில் இலங்கை சார்பில் உரையாற்றிய வெளிவிவகார அமைச்சர் இதனைத் தெரிவித்தார்

இலங்கையில் இடம்பெற்ற வன்முறைகள் தொடர்பில் விசாரிப்பதற்கான ஆணை அக்கட்டமைப்புக்கு வழங்கப்படும்.

இவ்வாறு நாட்டின் அரசியலமைப்புக்கு அமைவாக ஸ்தாபிக்கப்படும் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு சுயாதீனமாகவும், நம்பகமான முறையிலும் இயங்கும் என ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் அவர் தெரிவித்தார்.

எமது நாட்டில் கடந்த ஆண்டு நடைபெற்று முடிந்த தேர்தல்களின் ஊடாக அரசியல், பொருளாதார மற்றும் சமூக மறுசீரமைப்பை ஏற்படுத்தும் நோக்கில் நாட்டின் சகல பாகங்களையும் சேர்ந்த மக்கள் பெரும்பான்மை வாக்குகள் ஊடாக எம்மைத் தெரிவு செய்தனர்.

அதனையடுத்து இலங்கை வரலாற்றிலேயே எம்மால் கட்டமைக்கப்பட்ட பாராளுமன்றமே மலையகத்தைச் சேர்ந்த இருவர் உள்ளடங்கலாக அதிகளவு பெண் பிரதிநிதிகளையும், மாற்றுத்திறனாளி ஒருவரையும் உள்ளடக்கிய சகல தரப்பினருக்குமான பிரதிநிதித்துவத்துடன் கூடிய பாராளுமன்றமாகத் திகழ்கிறது.

தற்போது நாட்டின் பொருளாதாரம் ஸ்திரமடைந்திருப்பதுடன், அதனை சகலருக்குமான சமபங்கீட்டை உறுதிப்படுத்தக்கூடிய பொருளாதாரமாக நிலைமாற்றமடையச் செய்வதை நோக்கி நாம் பயணிக்கிறோம்.

அதேபோன்று எமது அரசாங்கம் சமர்ப்பித்துள்ள 2025ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தில் சமூகப் பாதுகாப்பு செயற்றிட்டங்களுக்கு அதிகளவான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதன் ஊடாக நெருக்கடிக்கு முகங்கொடுத்திருக்கும் மக்களுக்கான நிவாரணத்தை வழங்கியிருக்கிறோம்.

அதுமாத்திரமன்றி வடக்குக் கிழக்கு மாகாணங்களில் மீள்குடியேற்றம், வீடமைப்பு மற்றும் நட்டஈடு வழங்கல் ஆகியவற்றுக்கு அவசியமான நிதியொதுக்கீடும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும் நாம் புதிதாக அறிமுகப்படுத்தியுள்ள 'க்ளீன் ஸ்ரீலங்கா' செயற்றிட்டத்தின் ஊடாக நேர்மைத்தன்மை வாய்ந்ததும், பொறுப்புக்கூறத்தக்கதுமான ஆட்சி நிர்வாக முறைமையொன்றை நாட்டில் கட்டியெழுப்புவதற்கு உத்தேசித்துள்ளோம்.

அடுத்ததாக தேசிய ஒற்றுமை, நல்லிணக்கம் ஆகியவற்றை மேம்படுத்துவதை இலக்காகக் கொண்டு எமது அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயலாற்றுவதற்கு உறுதிபூண்டிருக்கிறது.

அதன்பிரகாரம் காணாமல்போனோர் பற்றிய அலுவலகம், இழப்பீட்டுக்கான அலுவலகம், தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அலுவலகம் உள்ளிட்ட உள்ளகப் பொறிமுறைகள் மேலும் வலுப்படுத்தப்படுவதுடன், அவை சுயாதீனமானதும், நம்பகத்தன்மை வாய்ந்த முறைமையிலும் இயங்குவது உறுதி செய்யப்படும்.

அதேபோன்று சகல தரப்பினரதும் நம்பிக்கையை வென்றெடுக்கக்கூடியவகையில் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பான கலந்துரையாடல்கள் சம்பந்தப்பட்ட சகல தரப்பினரையும் உள்ளடக்கி முன்னெடுக்கப்படும்.

அத்துடன் எமது நாடு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை உள்ளடங்கலாக ஐக்கிய நாடுகள் சபையின் முகவரமைப்புக்களிலும், உபகுழுக்களிலும் அங்கம் வகிக்கின்றது.

அக்குழுக்களினால் மேற்கொள்ளப்படும் கூட்டங்கள் மற்றும் மீளாய்வுகளில் முழுமையான ஒத்துழைப்பை வழங்கிப் பங்கேற்கிறது. நாட்டின் தேசிய சட்டதிட்டங்களுக்கு அமைவாக இந்த ஒத்துழைப்பைத் தொடர்ந்து வழங்குவதற்கு நாம் தயாராக இருக்கிறோம் எனவும் அவர் குறிப்பிட்டார். (ந-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

மஹஜன சம்பத — திகதி 2025.02.26 — சீட்டிழுப்பு இலக்கம் 5759 — O 2 8 4 5 5 1
அத சம்பத — O 4 5 5 1 — சீட்டிழுப்பு இலக்கம் 0334

தன நிதானய — திகதி 2025.02.26 — சீட்டிழுப்பு இலக்கம் 1789 — V 53 78 80 81 V — 61034

மெகா பவர் — திகதி 26/02/2025 — சீட்டிழுப்பு இலக்கம் 2107 — C 13 22 28 39 53

ஜய — திகதி 2025.02.26 — சீட்டிழுப்பு இலக்கம் 027 — K 5 4 9 3

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 4001 — சீட்டிழுப்பு திகதி 26.02.2025 — Z 20 49 51 52 — Z

ஹந்தஹன — உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2025.02.26 — சீட்டிழுப்பு இலக்கம் 1068 — கும்பம் 15 29 48 50 கும்பம் — 79076 — 45

சுபிரி தன சம்பத — உத்தியோகபூர்வ முடிவுகள் — 26.02.2025 — வெற்றி வாரம் 467 — K 3 6 9 9 0 7 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.31,932,819.20 — 94956

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 2733 — சீட்டிழுப்பு திகதி 2025.02.26 — தினம் புதன்கிழமை — 12 13 57 67 H — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.88,747,340.80

சனிதா — திகதி 26.02.2025 — வெற்றி வாரம் 4894 — 05 14 20 28 E — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 54,889,516.40 — 61124

ஜயோதா — திகதி 2025.02.26 — வெற்றி வாரம் 2107 — 04 29 37 57 R — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 28,087,924.40

ராசி — சீட்டிழுப்பு வாரம் 4445 — சீட்டிழுப்பு திகதி 26.02.2025 — தினம் புதன்கிழமை — 02 18 26 37 — மிதுனம் — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.14,801,052.80 — 132195

கப்ருக — ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம் — L 02 01 21 66 68 — 1909 — 26.02.2025 புதன்கிழமை — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.566,673,950.80

அத கோடிபதி — புதன்கிழமை — வெற்றி வாரம் 2559 — சீட்டிழுப்பு திகதி 2025.02.26 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.75,084,184.00 — 12 26 31 74 C — 725659

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கச்சதீவுப் பெருவிழா

# ஒழுங்கமைப்பு பணிகளுக்கு ரூ. 3 கோடியே 20 இலட்சம்

## கடற்படைக்கு வழங்கியது அரசு

கச்சதீவு திருவிழா ஒழுங்கமைப்பு பணிகளுக்கான செலவாக 3 கோடியே 20 இலட்சம் ரூபாய் நிதி கடற்படையினருக்கு அரசாங்கத்தினால் வழங்கப்பட்டுள்ளது.

கச்சதீவு பெருவிழா எதிர்வரும் 14ஆம் மற்றும் 15ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது. அதில் இலங்கை மற்றும் இந்திய பக்தர்கள் உள்ளிட்ட 9 ஆயிரம் பேர் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

பெருவிழாவில் கலந்து கொள்ள வருவோருக்கான உணவு, குடிநீர் வசதிகள், மலசல கூட வசதிகள் உள்ளிட்ட அடிப்படை வசதிகளை ஏற்பாடு செய்து கொடுப்பதற்கும், அதிகாரிகள், பெருவிழாவுக்கான ஏற்பாட்டாளர்கள், உள்ளிட்டவர்களுக்கான போக்குவரத்து, தங்குமிட வசதிகள் என பெருவிழாவை மிகச் சிறப்பாக முன்னெடுப்பதற்காகவுமே கடற்படையினருக்கு 32 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என மாவட்ட செயலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ந-7)

குடைச்சுவாமி சேவை நாடி ஜோதிடம்
அன்பானவர்களே
உங்களது வீட்டின் வாஸ்து பார்க்கவும், தீய சக்திகளை இனம் காணவும் சாதக பலன் பார்க்கவும் தொடர்பு கொள்ள அழைக்கவும்.
077 491 1975, 077 477 9925

### உள்ளூராட்சித் தேர்தல்

# சங்குச் சின்னத்தில் இணைவது பற்றி ஆராய்வு



(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியில் சங்குச் சின்னத்தில் போட்டியிடுவது தொடர்பில் இணக்கத்தை ஏற்படுத்துவது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நேற்று(26) திருநெல்வேலியில் உள்ள தனியார் மண்டபத்தில் நடைபெற்றது.

குறித்த கலந்துரையாடலில் புளொட் தலைவர் த.சித்தார்த்தன், ஈ.பி.ஆர்.எல்.எப். தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன், ரெலோ ஊடகப் பேச்சாளர் சுரேன் குருசாமி, தமிழ் தேசிய கட்சியின் தலைவர் சட்டத்தரணி என்.சிறீகாந்தா, ஜனநாயக போராளிகள் கட்சியின் சார்பில் வேந்தன், தமிழ் மக்கள் கூட்டணி சார்பில் வி.மணிவண்ணன், சமத்துவக் கட்சியின் தலைவர் மு.சந்திரகுமார், ஜனநாயக தமிழ் அரசுக் கூட்டமைப்பின் சார்பில் நாவலன், பா.கஜதீபன் உள்ளிட்டோர் இதில் கலந்து கொண்டனர்.

குறித்த கலந்துரையாடலில் தமிழ்த் தேசிய பசுமை இயக்கம் சார்பில் பிரதிநிதிகள் எவரும் பங்கேற்கவில்லை.

குறித்த கூட்டணியில் தமிழ் மக்கள் கூட்டணி இணைவதா இல்லையா என்பது தொடர்பிலான முடிவு கட்சியின் செயலாளர் நாயகத்துடன் பேசி விரைவில் அறிவிக்கப்படும் என்று அக்கட்சியின் சார்பில் குறித்த கலந்துரையாடலில் பங்கேற்ற சட்டத்தரணி வி.மணிவண்ணன் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தார். (ந-7,33)

# மரண அறிவித்தல்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 1983 - 03 - 13 | 2025 - 02 - 25 |

## தனபாலசிங்கம் நிருஜன்

பொன்னையா வீதி ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் 93, பத்திரகாளி கோயில் வீதி வண்ணார்பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட தனபாலசிங்கம் நிருஜன் அவர்கள் 25.02.2025 செவ்வாய்க்கிழமை அன்று அகால மரணமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தனபாலசிங்கம் - இராசலட்சுமி தம்பதிகளின் பாசமிகு மகனும் திருச்செல்வம் - காலஞ்சென்ற இராதாதேவி தம்பதிகளின் அன்பு மருமகனும் நிஷாந்தினியின் அன்புக் கணவரும் டிலுக்ஷிகா, கிருஸ்ணிகா ஆகியோரின் பாசமிகு தந்தையும் சாந்தினி, சிவநந்தினி, நிருஜா, அனுஷா ஆகியோரின் அன்புச் சகோதரனும் பியசேனா, சபிதகுமார், பிரபாகரன், ஜயந்தன், தினேஸ்வரன், நிஷாகரன், கிருஷாந்தினி, சர்வேஸ்வரன், துஷாந்தினி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 27.02.2025 வியாழக்கிழமை காலை 11.00 மணியளவில் 93, பத்திரகாளி கோயில் வீதி வண்ணார் பண்ணையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

077 292 8300
076 388 5554
(3528)

தகவல்:
குடும்பத்தினர்

### விபத்தை ஏற்படுத்திவிட்டு

# தப்பிய வாகனத்தை கைப்பற்றிய பொலிஸார்

(யாழ்ப்பாணம்)

யாழில் இறுதி ஊர்வலத்தில் பங்கு கொண்டவர்கள் மீது விபத்தினை ஏற்படுத்திவிட்டு தப்பிச் சென்ற வாகனம் பொலிஸாரால் கைப்பற்றட்டுள்ளது.


யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

குறித்த வாகனமானது கைதடி - தச்சன் தோப்பு பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் கோப்பாய் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

கடந்த 21ஆம் திகதி கோப்பாய் - கைதடி வீதியில் உள்ள இந்து மயானத்திற்கு பூதவுடலை எடுத்துச் சென்றவர்கள் மீது வாகனம் மோதியதில் அறுவர் படுகாயமடைந்தனர்.

இந்த விபத்தில் காயமடைந்த ஆறு பேர் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் ஒருவர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

காணி விற்பனைக்குண்டு
நீர்வேலிச் சந்தியில், அருமையான சூழலில் 7 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு.
074 38 25 961
076 91 97 566
(3509)

UK BUSINESS VISITOR VISA
லண்டனில் இடம்பெறும் LONDON TAMIL MARKET
வர்த்தக கண்காட்சியில்..
உங்கள் வியாபாரத்தினை
பொருட்கள்/உள்ளூர் உற்பத்தி பொருட்கள் / சேவைகள் நீங்களே நேரடியாக சென்று சர்வதேச சந்தையில் விளம்பரப்படுத்த

✓ விசா விண்ணப்பங்கள் ✓ STALL BOOKING
✓ HOTEL BOOKING ✓ RETURN AIR TICKET
✓ பயண ஒழுங்குகள் போன்ற அனைத்து சேவைகளுக்கும்..
தொடர்புகளுக்கு
V2 TRAVELS 0777068777
10/1 மாநகரசபை கட்டிடம், கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்
(C-2347)

நம்பினால் நம்புங்கள்
அதிசயம் ஆனால் உண்மை உங்கள் எதிர்கால வாழ்க்கை துல்லியமாக (காண்டம்) கணித்துத் தரப்படும். ஜனன ஜாதகம் எழுதித் தரப்படும்.
காயத்திரி திருமண சேவை
கன்னாதிட்டி சிவன் கோயில் முன்பாக ரூபி விலாஸ்
076 314 4689,
076 008 6961, 077 844 9861
(3521)

## பெயர்மாற்ற அறிவித்தல்

இல.173, விநாயகபுரம், கிளிநொச்சி முகவரியைச் சேர்ந்த தேசிய அடையாள அட்டை இல-197719010073 கொண்ட சரத்விஜயானந்த போகஸ்தெனியே ரஞ்சன்குமார விஜயானந்த ஆகிய நான் கடந்த 24.02.2025 திங்கட்கிழமை முதல் எனது பெயரை **விஜயானந்த ரஞ்சன்குமார்** என மாற்றிக் கொண்டுள்ளேன் எனவும் இனிமேல் சகல ஆவணங்களிலும் எனது புதிய பெயரையே பயன்படுத்துவேன் எனவும் அவ்வாறே கையொப்பமிடுவேன் எனவும் இத்தால் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் மக்களுக்கும் அறியத்தருகின்றேன்.

இப்படிக்கு
விஜயானந்த ரஞ்சன்குமார்
(C-2343)

மேற்பார்வையாளர் தேவை
யாழ். நகரில் இயங்கும் பிரபல தனியார் கல்வி நிறுவனத்திற்கு மேற்பார்வையாளர்கள் தேவை. கணனி அறிவுள்ளவர்கள் விரும்பத்தக்கது. யாழ். நகரை அண்டியவர்கள் தொடர்பு கொள்ளவும். நேர்முகத் தேர்வு 28.02.2025 வெள்ளிக்கிழமை காலை 10.00
074 0567 791
(C-2340)

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.02.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org